பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 28 திங்கட்கிழமை (12.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:047

# இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே ஒரே வழி!

## 178 நாடுகளின் தூதுவர்கள் மாநாட்டில் பாப்பரசர் வலியுறுத்து



வத்திக்கான், ஜனவரி 12

இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசியல் தீர்வு மட்டுமே ஒரே வழி. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கு உறுதியான, உகந்த தீர்வு அரசியல் ரீதியானது மட்டுமே; வேறு எதுவும் அல்ல.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர்.

உலகில் 178 நாடுகளில் உள்ள பாப்பரசரின் தூதுவர்களின் மாநாடு நேற்று வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க திருச்சபையில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் ஆசியாவைச் சேர்ந்த பிரதிநிதிகளே அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நீண்டகாலமாக தொடர்ந்துவரும் இனப்பிரச்சினையை அரசியல் தீர்வுமூலமே தீர்க்க வேண்டும்-

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான போர் இறுதிக் கட்டத்தை எட்டிக்கொண்டிருப்பதாக தோன்றுகின்றது.

இந்தக் கட்டத்தில் அரசியல் தீர்வு (16 ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டிக்குளத்தில் விமானத் தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சுண்டிக்குளம் பகுதிமீது நேற்று விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் இரு வேறு தாக்குதல்களை நடத்தின.

சுண்டிக்குளம் கடல்நீரேரியில் விடுதலைப் புலிகளின் படகுகள் இரண்டின் மீது நேற்று முற்பகல் 11.20 மணியளவில் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்றும் -

அத்தாக்குதலை அடுத்து இரண்டு மணி நேரத்தின் பின்னர் சுண்டிக்குளம் பகுதியில் இருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் மீதும் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்றும் - படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

## பதிவு செய்யாத அனைவரும் விசாரணைக்கு உள்ளாவர்!

### கோத்தபாய எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 12

நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாப்பு அமைச்சு தனது இணையத்தளத்தில் இதற்கென ஒதுக்கியுள்ள பிரிவில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டிருக்கின்றது.

அப்படித் தங்களைப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் நால்வர் பீரங்கித் தாக்குதலில் பலி!

### சிறுமி உட்பட நால்வர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிமீது சனிக்கிழமை இரவு 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் உயிரிழந்தனர். மேலும் சிறுமி உட்பட நால்வர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தன.

சிலாவத்தையில் இருந்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த காத்தான் துரைசாமி (16 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவின் தலைமையில் இயங்கும் ஆயுதக் குழுவே லஸந்தவின் படுகொலைக்கு காரணம் என்கிறார் மங்கள

கொழும்பு, ஜனவரி 12

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் 'பிசாசுப் படையணி', 'சிங்க மாபியா' மற்றும் 'கே - 09' போன்ற வெவ்வேறு பெயர்களில் ஆயுதக் குழுவொன்று இயங்குகின்றது என்றும், இந்த ஆயுதக் குழுவே 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவைக் கொலை செய்தது என்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் தலைவருமான மங்கள சமரவீர நேற்றுக் குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இக்குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணையை வழமைபோல் கைவிட ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார்.

கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் ஜனாதிபதி எடுக்கவில்லை.

லஸந்த கொல்லப்பட்ட செய்திக்கு பத்திரிகைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம் என்று பத்திரிகை (16 ஆம் பக்கம் பார்க்க)

## லஸந்த படுகொலை குறித்து 4 பொலிஸ் குழுக்கள் விசாரணை

கொழும்பு, ஜன. 12

'த சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நான்கு விசேட பொலிஸ்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி தொடர்பாக ஒரு பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, சம்பவம் இடம்பெற்ற சமயம் அவ்விடத்தில் இருந்த ஓட்டோ சாரதிகளிடம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

'த சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம (16 ஆம் பக்கம் பார்க்க)

## லஸந்த விக்கிரமதுங்கவின் இறுதி ஊர்வலம் இன்று

கொழும்பு, ஜன. 12

வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட 'த சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் இறுதிக் கிரியை நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு கனத்தையில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் பூதவுடல் கடந்த வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக இரத்மலானையில் அமைந்துள்ள 'த சண்டே லீடர்' பத்திரிகை அலுவலகத்தில் வைக்கப்பட்டது.

அன்றைய தினமே உடல் பத்திரமுல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் விசேட பிரதிநிதி அகாஷி 4 நாள் விஜயமாக இங்கு வருகிறார்

கொழும்பு, ஜன்12

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பிற்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை அரசின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் 21ஆம் திகதி இங்கு வரவுள்ள அகாஷி 25 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்திப்பார்.

அவர் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களையும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கருணா குழு அலுவலகம் மீது விடுதலைப்புலிகளின் அணி தாக்குதல்

கொழும்பு, ஜன. 12

திருகோணமலை, மூதூர் கிளிவெட்டிப் பகுதியில் அமைந்துள்ள கருணா குழுவின் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகம் மீது சனிக்கிழமை இரவு 8.20 மணியளவில் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று தாக்குதல் நடத்தியது என்று படைத் தரப்பில் கூறப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மகிழ்ச்சிகரமான இடம் என்று சிறுவர்களைக் கவர்வதற்கான கால்கோள்விழா

**மாணவர்களின் முதல்நாள் பாடசாலை அனுபவம் அவர்களை, பாடசாலை மீதான நாட்டத்தை ஏற்படுத்தக் கூடிய வாறு மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டும். அதனை நோக்காகக் கொண்டு தரம் – 1 வகுப்பில் சேரும் சிறுவர்களை வரவேற்கும் 'கால் கோள் விழா' பாடசாலைகளில் இன்று நடைபெறுகின்றது. அதனையொட்டி இந்த அறிமுகம் வெளியிடப்படுகிறது.**

பாடசாலைக் கல்வியை ஆரம்பிப்பதற்காக தரம் 1 வகுப்பில் சேரும் மாணவர்களின் முதல் நாள் பாடசாலைப் பிரவேசம் அம் மழலைகளின் மனதில் பசுமை நினைவுகளாக பதியவேண்டுமென்ற நிலைப்பாட்டில் கல்வி அமைச்சு ''கால்கோள் விழா'' ஏற்பாட்டினை கடந்த சில வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வருடம் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் கால்கோள் விழா இன்று (12.01.2009) இலங்கை முழுவதுமுள்ள ஆரம்பப் பிரிவைக்கொண்ட சகல பாடசாலைகளிலும் நடைபெறுகின்றது.

மனித வாழ்வில் கல்வியின் உன்னதமான மகத்துவம் உணரப்பட வேண்டும். கல்வியறிவு பெற்ற வனே சமுதாயத்தில் மதிப்புள்ளவனாகக் கணிக்கப்படுகின்றான். கல்வி ஓர் அத்தியாவசியமான தேவை என்ற சிந்தனைகளின் வெளிப்பாடாகப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு கல்வியைப் பெற்றுத் தருவதற்காக பெரும்பாடுபடுகிறார்கள். இலங்கையில் அரசாங்கமும் இதற்காக பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்ட நிலையில் முன்னெடுப்பதோடு வருடாந்தம் பெருமளவு நிதியினையும் செலவு செய்கின்றது.

ஆண்டுதோறும் முதலாம் தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் முதல் நாள் பாடசாலை அனுபவம் சிறப்பான வகையில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கும் கல்வியமைச்சு, அதற்கான செயற்பாடுகளை பாடசாலைகளுக்கு அறிவுறுத்துகின்றது. முறையான வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்து இரண்டாம் வகுப்பு மாணவர்கள் மூலமாக முதலாம் வகுப்பு மாணவர்கள் முதலில் வரவேற்கப்படுவார்கள். மலர் கொடுத்து, மாலை அணிவித்து மற்றும் தமது பாரம்பரிய முறைகளில் இவ்வரவேற்பு அமையும். இம் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றுகூடி சமய வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். பின்னர் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் ஆடல்கள், பாடல்கள் மற்றும் விளையாட்டுக்கள் மூலம் புதிய மாணவர்களை உற்சாகப்படுத்துவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமான விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள் பங்கு கொண்டு பிள்ளைகளை குதூகலாமாகச் செயற்பட வழிப்படுத்துவார்கள். சமயத் தலைவர்கள் மாணவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து மாணவர்களின் பாடசாலை முதல் நாளை பெறுமதிமிக்கதாக்குவார்கள். அதிபர், ஆசிரியர்களால் பெற்றோர்களுக்கு கல்வி மறுசீரமைப்பு, புதிய பாடவிதானங்கள் பிள்ளைகளை கல்வியின்பால் நாட்டமுடையவர்களாகப் பராமரித்தல் போன்ற விடயங்களில் கருத்துரைகள் வழங்கப்படும்.

பல பாடசாலைகளில் புதிய மாணவர்களை கவர்வதற்காக வெகுமதி வழங்கல் மற்றும் சிற்றுண்டிகளைப் பரிமாறல் போன்றவையும் இடம்பெறுகின்றன.

இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகளுக்கு பாடசாலையின் மீதான நாட்டத்தை அதிகரிக்க முடியும் எனவும் பாடசாலை மகிழ்ச்சிகரமான இடம் என்ற கருத்துப் பதிவை ஏற்படுத்த முடியும் எனவும் கல்வி அமைச்சு எதிர்பார்க்கின்றது.

வரதராஜசர்மா ஸ்ரீ காந்தன்
(அதிபர்,சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

## சங்கானை மீன் சந்தைக்கு புதிய கட்டடம்

சங்கானை, ஜன.12

சங்கானை மீன் சந்தைக் கட்டடம் சுகாதார முறைப்படி பாதுகாப்பான முறையில் புதிதாக கட்டப்பட்டு வருகிறது.

திறந்த கட்டடமாக இதுவரை காலமும் இக்கட்டடம் இருந்து வந்துள்ளது.

தற்போது அரைச்சுவர் எழுப்பி, கம்பி வலை அதற்குமேல் போடுவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன.

கட்டாக்காலி நாய்கள், காகங்கள் எதுவும் உட்செல்ல முடியாத நிலையில் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை- இம் மீன் சந்தை வளவில் மீன் வெட்டுவதனாலும் கோழிகள் உரிக்கப்படுவதனாலும் எச்சங்களால் துர்நாற்றமும் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டு வருவதாக மக்கள் விசனத்துடன் கவலை தெரிவிக்கின்றனர். உரியமுறையில் இந்த எச்சங்கள் வெட்டிப் புதைக்காததால் இந்நிலை ஏற்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (1-29)

# தேசிய பாதுகாப்புக்காக அனைத்து மக்களையும் இணையத்தளம் மூலம் பதியுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஜன.12

தேசிய பாதுகாப்பிற்காக நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இம்மாதம் 10 ஆம் திகதி முதல்இணையத்தளம் மூலம் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு தேசிய பாதுகாப்பிற்கான ஊடக தகவல் மையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹலுகல்ல தெரிவித்துள்ளார். பதிவுசெய்து கொள்வதற்கான இணையத்தள முகவரி WWW.CITIZENS.LK எனவும் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் மூலமாகப் பதிவு செய்வதால் பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது வேறு ஏதாவது நிலையங்களுக்கோ செல்லவேண்டிய கஷ்டம் தவிர்க்கப்படுகிறது. அவர்கள் வீடுகளிலிருந்தே தமது பதிவை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பலரின் வீடுகளில் கணனி இல்லை. ஆகவே இத்திட்டம் எந்தளவு நடைமுறைச் சாத்தியம் என அவரிடம் வினவப்பட்டபோது, தற்போது பெரும்பாலானோரிடம் இந்த வசதி இருக்கின்றது. அப்படி இல்லாதவர்களை அருகில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையங்களுக்குச் செல்லுமாறு கூறியிருக்கின்றோம். அத்துடன் இப்பதிவை மேற்கொள்வதற்கான நடமாடும் வாகன வசதிகளையும் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். ஆகவே இப் பதிவு செய்யும் வாகனங்கள் அல்லது பொலிஸ் நிலையங்களில் உள்ள கணனி மூலம் பதிவு செய்துகொள்ள முடியும்.

இதில் எந்தக் காலக்கெடுவும் இல்லை. நேற்றுமுன்தினம் முதல் அவர்கள் பதிவு செய்யலாம். அவ்வாறு அவர்கள் செய்யாவிட்டால் காலக்கெடு குறித்து ஆராய்வோம் எனப் பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கிலிருந்து வந்தவர்கள் அண்மையில் கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இந் நிலையில் இப்போது இந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதன் காரணம் என்ன என்று அவரிடம் வினவியபோது-

அதைத் தான் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறோம். இப்போது அவர்கள் வீட்டி லிருந்தவாறே இப்பதிவை மேற்கொள்ள லாம். பொலிஸ்நிலையங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை.

பொலிஸ் நிலையங்களுக்கு 500 பேர் வந்ததாகவும் ஆனால் அங்கு பதிவை மேற்கொள்ள 5 அதிகாரிகள் தான் இருந்ததாகவும் எமக்கு புகார் வந்தது. அதனால் தான் இந்நடவடிக்கை. இதன்மூலம் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கமுடியும் என பதிலளித்தார்.

இலங்கையில் ஏற்கனவே தேசிய அடையாள அட்டை இருக்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பும் நடத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் மீண்டும் விவரங்களைப் பெறுவதற்கான தேவை என்ன? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்-

இது மீண்டும் பதிவு செய்யும் நடவடிக்கையாக இருந்து விட்டுப் போகட்டுமே. கடவுச்சீட்டு இருக்கிறது. அடையாள அட்டை இருக்கிறது. சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பல்வேறு அடையாள அட்டைகள் உள்ளன. எனினும் தேர்தல் வாக்களார் பட்டியலுக்காக ஆண்டு தோறும் மக்கள் பதிவு செய்கிறார்கள். மீண்டும் ஒரு முறை நாங்கள் பதிவு செய்யுமாறு கேட்டால் என்ன கெடுதி வந்துவிடப்போகிறது. இதனால் எந்தத் தீங்கும் ஏற்படாது. மக்களிடமிருந்து நாங்கள் கட்டணம் எதுவும் வசூலிக்கவில்லை. பதிவு செய்யுமாறு ஒரு நிர்வாக உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு மட்டும்தான்- என்றார்.

## அனைத்துக் கட்சிக்குழு இவ்வாரம் கூடுகிறது

கொழும்பு, ஜன.12

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை ஆராயும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு நூறாவது தடவையாக இவ்வாரம் கூடவிருக்கின்றது.

அந்தக்குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரன இதனைத் தெரித்தார்.

அதிகாரப் பரவலாக்கலில் அதிகாரப் பகிர்வு குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டு விட்டது. சில சந்தேகங்கள் குறித்து ஆராயவே குழு கூடவிருக்கின்றது என்று அவர் கூறினார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் மற்றைய கட்சிகளும் குழுவில் சேர்ந்து அதிகாரப் பகிர்வை இறுதியாக்க முன்வர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## கால்நடைகளால் வயல்கள் நாசம்

வரணி, ஜன.12

வரணிப் பகுதியில் உள்ள வயல்களை கட்டாக்காலி கால்நடைகள் நாசம் செய்து வருகின்றன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. வடமராட்சிப் பகுதியில் இருந்து வரும் கால்நடைகள் இவ்வாறு நெல்வயல்களை நாசம் செய்கின்றன என்று வரணி வடக்கு விவசாய சம்மேளனம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் கூறப்பட்டது.

## யாழ். சிவில் அலுவலகத்துக்கு இன்னும் தகவல் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜன.12

பொதுமக்கள் இணையத்தளம் மூலம் பதிவுகளை மேற்கொள்வது தொடர்பாக தமக்கு இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

தொலைக்காட்சி மூலம் இதுதொடர்பான தகவலை மட்டும் அறிந்ததாகவும் மேலும் விவரம் எதுவும் கிடைக்கவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் படையினர் வீடு வீடாகச் சென்று விவரங்களை இணையத்தளத்தில் பதியுமாறு கோரியுள்ளனர். (அ-1)


## வரலாறு 2008

★முன்னணி ஆசிரியரின் முன்னணிப் பெறுபேறுகள்

| | | | |
|---|---|---|---|
| இ.பிரசாந்தி | (A) 3A | இ.பார்த்தீபன் | (A) |
| பா.நிரோசா | (A) 3A | க.சித்திரா | (A) |
| சி.பிரமிலா | (A) 3A | கு.யசோதரா | (A) |
| லோ.வானதி | (A) 3A | சி.நிறோஜா | (A) |
| சு.நிரோசனா | (A) 3A | யோ.முகுந்தினி | (A) |
| யோ.இந்துஜா | (A) | வி.கிஜாந்தி | (A) |
| இ.துஸ்யா | (A) | சே.ஜெயதேவி | (A)3A |

★ வரலாற்றின் சாதனைப் பெறுபேறுகள்
A சித்தி 42% சித்திவீதம் 100% B சித்தி பெற்றோர் 28 பேர்
★ தலை சிறந்த பெறுபேறு பெற்று புகழ் சேர்த்த மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துக்கள்.

ஆசிரியர்: K.சுதன் B.A (Hons) History (Spl.)

★ ஆசிரியர் கற்பிக்கும் இடங்கள்
★ யாழ்.நகரில், இணுவிலில் - பொருளியற் கல்லூரி ★ சித்தன்கேணியில் - பாரதி நிறுவனம்
★ ஆசிரியர் K.சுதன் யாழ்.நகரில் மேற்படி நிறுவனங்களில் மட்டுமே கற்பிப்பார் என்பதை மாணவர் கவனத்தில் கொள்ளவும். (வேறு இடங்களில் கற்பிப்பதாக தவறாக விளங்க வேண்டாம்)
★ 2009 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு Paper Class ஆரம்பம் 18.01.2009 ஞாயிறு பி.ப. 1.00 மணிக்கு யாழ்.பொருளியல் கல்லூரியில்.


## நாவாந்துறையில் விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், ஜன.12

நாவாந்துறையைச் சேர்ந்த சகல தரப்பு மக்களும் ஒன்றிணைந்து விழிப்புக்குழு ஒன்றை நேற்று அமைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாவாந்துறையை அண்டிய பிரதேசங்களில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் கலாசார சீர்கேடுகளை தடுக்கும் நோக்கில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவுடன் இந்தக்குழு நேற்று அமைக்கப்பட்டது.

இந்தக்குழு இன்று முதல் செயற்படும் [illegible] தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பரும் சுவிஷேச பாடகருமாகிய

**துரைராஜா கணேசன்**

நேற்று (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவருடைய மனைவி மற்றும் உற்றார், உற்வினர் அனைவருக்கும் எமது திருச்சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

போதகர் பி. அருமைநாயகம்,
பிலிவேர்ஸ் சேச்,திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று(11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுந்தரம்பிள்ளை, இராசம்மா, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் மங்கையர்க்கரசி (கனடா), சந்திரசேகரம்(சுவிஸ்), பரமேஸ்வரரி(கனடா), இராஜேஸ்வரி (கொழும்பு), மங்களேஸ்வரி(சுவிஸ்), சந்திரரேஸ்வரி, இராசேந்திரம், தெய்வேந்திரம் (சுவிஸ்), குலேந்திரம் (சுவிஸ்), ஞானேஸ்வரி(கனடா), இரவீந்திரன்(சுவிஸ்),குலேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் விஜயரட்ணம், குணலட்சுமி(சுவிஸ்),துரைசிங்கம்(கனடா), பாலசுந்தரம் (கொழும்பு), நாகராசா(சுவிஸ்), இராசேந்திரம், சுந்தரரேஸ்வரி, வளர்மதி(சுவிஸ்), ரேவதி(சுவிஸ்), உமா(சுவிஸ்), உதயகுமார் (கனடா), அமரர் வசந்தகுமார் ஆகியோரின் மாமனும் விஜயகுமார், விஜயகுமாரி, விஜயநந்தினி, கோமேதா, சிந்துஜா, சுகந்திகா, துசியந்தன், தனுஷா, விஜயசிறீ, தசந்தன், ஜெயந்தன், அமரர் சிந்துஜன், பிறேமானந்தி, அமரர் பிறேமலதா, றமேஷன், அஜந்தினி, தர்சினி, நரேஸ்குமார், சஞ்சிகா, கோபிகன், தர்ஷன், நிலுஷன், அபிஷேக், எழில்வேந்தன், நிவேதா, பிரசன்னா, துஷன், கரிதாஸ், யதுஷன், சாரா, பிரணவன், அஸ்வினி, பரிதி ஆகியோரின் அன்புப் பேரனும் சேதுஷன், பிருந்தா, யாதவி, ஓவியா, அஸ்வினி, கனிஷா, லக்ஸ்மன், லௌரன், விதுஷன், விதுஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.01.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.இராசேந்திரம்
(மகன் - அப்பர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சேடம் இழுக்கும் ஊடக சுதந்திரம்

இலங்கையில் ஊடக சுதந்திரம் உயிர் பிரியும் நோயாளி போல மூச்சிழந்து அல்லாடிக் கிடக்கின்றது.

2009 ஆம் ஆண்டு பிறப்புடன் இலங்கையின் ஊடக சுதந்திரத்துக்கு சேடம் இழுக்கத் தொடங்கிவிட்டது.

முதலில் மகாராஜா குழுமத்தைச் சேர்ந்த எம்.ரி.வி., எம்.பி.ஸி. போன்றவற்றின் அலுவலகத்துக்குப் பெற்றோல் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. அது குறித்துப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும் உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்படாத நிலையில் அதன் கலையகம் மீது அராஜகக் கும்பல் ஒன்றினால் வெறியாட்டம் நடத்தப்பட்டது.

அது நடந்து இரண்டு நாள்களுக்குள் இலங்கையில் பிரசித்தி பெற்ற பத்திரிகை ஆசிரியர் ஒருவர் பட்டப் பகலில் - நட்ட நடு வீதியில் வைத்து - சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இத்தாக்குதல்கள் குறித்து வெளிவரும் செய்திகளின் படி, எம்.ரி.வி. கலையகம் மீதான தாக்குதலில் சுமார் இருபது பேர் கொண்ட குழு இயந்திரத் துப்பாக்கிகள், கிரனேட்டுகள், கிளைமோர்க் குண்டுகளுடன் பங்குபற்றியுள்ளது. 'த சண்டே லீடர்' ஆசிரியர் படுகொலைச் சம்பவத்தில் அவரது நடமாட்டங்களை வேவு பார்த்தல், அவரது வாகனத்தை வழிமறித்துத் தாக்கியமை போன்றவற்றுடன் ஐந்து பேருக்கும் குறையாத அணி ஒன்று இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் ஈடுபட்டிருக்கின்றது.

இச்சம்பவங்களை அடுத்து, ஆங்கில வார இதழ் ஒன்றில் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய விடயங்களை எழுதும் முன்னணி இராணுவ விமர்சகர் ஒருவர் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான தமது வாராந்த ஆய்வை எழுதுவதை நிறுத்திவிட்டார். 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவை இலக்கு வைப்பதற்கு முன்னரே இவரது உயிருக்கும் உலை வைக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும், அதிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்த அவர், அக்காரணத்தினால் தமது பேனாவுக்கு ஓய்வு கொடுத்திருக்கின்றார் என்றும் அறிய முடிகின்றது. முதலில் அவரது உயிருக்கு உலை வைக்க முயற்சி எடுத்தவர்கள், பின்னர் தொலைபேசி மூலம் அவரை மிரட்டியிருக்கின்றனர் என அவர் தமது நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தினார் எனவும் அறிய வந்தது.

இதேவேளை, தற்போதைய இராணுவ நடவடிக்கைகளை ஒட்டிய விடயங்களை - உள்வீட்டுத் தகவல்களை - கொழும்பிலிருந்தபடி வெளியிட்டு வந்த 'லங்கா டிஸெண்ட்' என்ற இணையத்தள ஊடகமும் 'த சண்டே லீடர்' ஆசிரியரின் படுகொலையுடன் மௌனித்து விட்டது.

மறுபுறத்தில், புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடை என்ற பெயரில் அவசரகாலச் சட்ட ஒழுங்குப் பிரமாணங்களின் கீழ் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய சட்ட ஏற்பாடுகளும் ஊடக சுதந்திரத்துக்கு ஆப்பு வைத்திருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு குறுகிய பிரதேசத்துக்குள் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் - சுமார் நான்கு லட்சம் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் சிக்குண்டுள்ளனர். புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்றபெயரில்இந்தப்பிரதேசத்தைச் சுற்றிவளைத்துப் பெரும் எடுப்பிலான தனது இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசுப் படைகள் தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றன.

இதனால், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்த மக்கள் பேரவலத்தில் மட்டுமல்லாமல் பேராபத்திலும் சிக்குண்டுள்ளனர். அங்கு ஷெல், பீரங்கி, துப்பாக்கிச் சூடு மற்றும் வான் குண்டு வீச்சில் காயமடையும் அல்லது உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருவதும் கண்கூடு.

இந்தச் சமயத்தில்தான் இம்மக்களின் உண்மை நிலைவரத்தை வெளிக்கொணர வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் ஊடகங்கள் மீது - குறிப்பாகத் தமிழ் ஊடகங்கள் மீது - அதிகமாகச் சுமத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால், அக்கடமையை அவை நிறைவேற்ற முயன்றால், புலித்தடையை ஒட்டிய அவசரகாலச் சட்ட விதிகள் அவர்கள் மீது பாயும் ஆபத்து நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. 'புலி ஆதரவுப் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்' என்று குற்றம் சுமத்தப்பட்டு இருபது ஆண்டுகள் வரை அவர்களுக்கு சிறை விதிக்கப்படக்கூடிய ஆபத்து ஏதுநிலையும் உண்டு.

ஆகவே, தமிழ் ஊடகங்களும் இன்று பகுதியாக மௌனிக்கும் கட்டாயத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டிருக்கின்றன.

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் கணிப்பீட்டின்படி, 2002 இல் சர்வதேச மட்டத்தில் 51 ஆவது இடத்தில் இருந்த இலங்கையின் ஊடக சுதந்திர சுட்டி, மெல்லக் கீழிறங்கி 2005 இல் 115 ஐ அடைந்து, மேலும் நலிவுற்று, கடந்த ஆண்டில் 165 ஆவது இடத்தை அடைந்திருக்கின்றது. உலக நாடுகளின் தரவரிசையில் கடைசி 7 இடங்களுக்குள்தான் இலங்கையின் ஊடக சுதந்திரம் வீழ்ந்து கிடக்கின்றது.

ஆனால், 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் ஆயுததாரிகள் புகுந்து நடத்திய வெறியாட்டத்தில் இருந்து கடந்த வியாழனன்று 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் கொல்லப்பட்டமை வரையான தாக்குதல்கள் அனைத்தும் இராணுவத்தினரின் வெற்றியைத் திசைதிருப்புவதற்காக சில சக்திகள் மேற்கொண்ட சதி என்று வெகு 'ஸிம்பிளாக' கூறிவிட்டார் நாட்டின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

அந்தச் சதிகாரர்களை வெளிப்படையாக அவர் அம்பலப்படுத்தாதவரை இவ்விடயங்களுக்கான தொப்பி அரசின் தலைமீதுதான் என்பது தவிர்க்க முடியாதது. அதை மறைக்க முடியாது என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொண்டால் சரி.

# அரசியல் தீர்வை முன் வைக்குமாறு உலக நாடுகள் அரசுக்கு நெருக்குதல்

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் அரசியல் விமர்சகர் நேற்று 11.01.2009 அன்று எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதி இங்குதரப்படுகின்றது.**

கிளிநொச்சியைக் கைப்பற்றியதுடன் தொடர்ந்தும் இராணுவ வெற்றிகளைக் குவித்துவரும் அரசாங்கம் ஒருவித தடுமாற்றமான நிலைமைக்குள் இப்போது தள்ளப்பட்டுள்ளது. போர்முனை வெற்றிகளை தேர்தல்கள வெற்றிகளாக மாற்றி அமைத்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசு இப்போது இந்த முயற்சிகளை இரட்டிப்பாக்கி வருகின்றது.

வடமத்திய மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் இப்போது முக்கிய கவனம் பெறத் தொடங்கியுள்ளன.



பொருளாதார நிவாரணத்துக்கான பொதியொன்று வழங்கப்பட்ட நிலையில் கிடைத்துள்ள இராணுவ வெற்றிகள் தேர்தல் வெற்றிகளாக மாற்றப்படப் போகின்றன.

இப்பொழுது உருவாகியுள்ள உச்ச நிலைச் செல்வாக்கினைப் பயன்படுத்தி, பொதுத்தேர்தல் ஒன்றையும் நடத்தி வெற்றிவாகை சூடுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

இந்த இரட்டைவழிப் பாதையை அரசு முன்னெடுக்க முனைந்துள்ள அதே வேளை, சர்வதேச சமூகம் அரசை அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு வற்புறுத்தத் தொடங்கியுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ மட்டத்திலான் தீர்வு அல்ல. அரசியல் தீர்வே சாத்தியமானது என்று கடந்த வாரம் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியிருந்தார். அதனை இந்தவாரம் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெளிவுபடுத்தியிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்டிருப்பதால் புலிகளுடன் பேச்சு நடத்தும்படி அமெரிக்க அதிகாரிகள் வற்புறுத்தவில்லை. ஆனால் அரசியல் தீர்வொன்றைக் காணும்படியான கோரிக்கையை அமெரிக்கா தொடர்ந்து முன்வைத்து வருகின்றது.

அடுத்தவாரம் இரு வெளிநாட்டு அரசியல் பிரமுகர்கள் இலங்கை வரவிருக்கிறார்கள். ஒருவர் இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர்மேனன். இவர்கள் இருவரும் அரசின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை நடத்துவார்கள் என்று தெரிகின்றது. அரசியல் தீர்வொன்றையே இந்தியா எதிர்பார்க்கிறது என்பதைக் கடந்த வாரம் மேனன் புதுடில்லியில் செய்தியாளர் மாநாடொன்றில் விளக்கியிருந்தார். அவர் தெரிவித்திருந்த இன்னொரு கருத்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கைது செய்யப்பட்டால் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான விசாரணையை எதிர்கொள்ளும் வகையில் அவர் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைக்

## சிவ்சங்கர் மேனன் - யசூஷி அகாஷி இலங்கை வருகிறார்கள்

கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசை போர் நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வற்புறுத்துவதற்காக இந்திய வெளி உறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி முன்னர் இலங்கை வரவிருந்தார். தமிழ் நாடு முதல்வர் தலைமையிலான அம் மாநில கட்சித் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையொன்றையடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் பணிப்புரையின் கீழ் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தியாவில் நிலைமைகள் சிக்கலடைந்தமையால் பிரணாப் முகர்ஜியின் இலங்கைப் பயணம் பின்போடப்பட்டது. முகர்ஜியின் பயணம் இனி பெப்ரவரி மாதத்தில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிவ்சங்கர் மேனனின் வருகை வித்தியாசமானதொரு பின்னணியில் இடம் பெறவிருக்கின்றது. கடந்த புதன்கிழமை புலிகள் இயக்கத்தை அரசாங்கம் முற்றாகவே தடைசெய்துவிட்டது. இதன் மூலம் பேச்சுவார்த்தைக்கான கதவும் மூடப்பட்டுவிட்டது. தடைசெய்யப்பட்டு விட்ட இயக்கத்துடன் அரசால் பேச்சு நடத்த முடியாது. அப்படிச்செய்வதானால் அரசின் இன்னொரு நிபந்தனையான ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். புலிகள் மீதான அவ்வாறான தடையொன்றை இந்தியா விரும்பவில்லையென்று ராஜதந்திர வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. ஆனால் இந்தியாவில் அது தடை செய்யப்பட்டிருக்கும்போது இலங்கையிலும் தடை செய்யப்படுவது பொருத்தமே என்று சில வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

புலிகளை மட்டுமன்றி வேறு பலரையும் இந்தத் தடை பாதிக்கப் போகின்றது. தடை விதிக்கப்படாத நிலையிலேயே நடைமுறையிலிருக்கும் அவசரகாலச் சட்டவிதிகளும் வேறு சட்டங்களும் புலிகளை ஏற்கனவே சட்டவிரோத அமைப்பாக செய்துவிட்டிருந்தன. அரசாங்கத்தினால் புலிகள் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வர அனுமதிக்கும்படி மீண்டும் மீண்டும் விடுக்கப்பட்ட கோரிக்கையை உதாசீனம் செய்தமையாலேயே தடைவிதிக்கப்படுவதாக அரச அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலிகள் மீதான தடையானது இலங்கையர்களைக் குறிப்பாக ஊடகவியலாளர்களைப் பெரிதும் பாதிப்பதாக இருக்கப்போகிறது. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள மனிதநேய அமைப்புகளும் பாதிக்கப்படலாம். இந்த அமைப்

## கிளிநொச்சி கைப்பற்றப்பட்ட பின் எதிர் நோக்கப்படும் சிக்கல்

புகள் புலிகளுடன் தொடர்புகொள்ள நேர்வது தவிர்க்கமுடியாததாகும். இந்த நிலைமைகள் பற்றி அரச அறிவித்தல் தெளிவில்லாமல் இருக்கின்றது.

**முக்கியத்துவம் பெறும் பேச்சுக்கள்**

கிளிநொச்சி பிடிபட்ட நிலையில் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட பின்னர் இந்திய வெளியுறவுச் செயலரின் வருகையும் அவர் அரசு அதிகாரிகளுடன் நடத்தும் பேச்சுக்களும் முக்கியத்துவம் பெறுவதாக ராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

சிவ்சங்கர்மேனன் சமீபகால நிலைமைகளையொட்டிய இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவார் என்றும் இந்தியா வழங்கியிருந்த காலக்கெடு நீண்டு சென்றுவிட்ட நிலையில் அரசியல் ஆலோசனைகள் உருவாக்கப்பட்டு முன்வைக்கப்பட வேண்டிய கட்டாய நிலையை அவர் வலியுறுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஜப்பானிய விசேட தூதுவர்**

கொழும்புக்கு வரவிருக்கும் இன்னொரு வெளிநாட்டுப் பிரமுகர் ஜப்பானிய விசேஷ தூதுவர் யசூஷிஅகாஷி ஆவார். இலங்கை அரசின் செயற்பாடுகளை ஜப்பானிய விசேட தூதுவர் சர்வதேச அரங்குகளில் ஆதரித்து வந்துள்ளதுடன், அரசுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்துள்ளார்.

இலங்கை ஊடகத் துறையினருக்கு கடந்த வாரம் மிகவும் கவலை தரும் வாரமாக இருந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுதம் தரித்த கும்பல் ஒன்று மகாராஜா தொலைக்காட்சி நிறுவன கலையகத் துக்குள் புகுந்து கைத்துப்பாக்கிகள், ரைபிள்கள், எறிகுண்டுகள் போன்ற வற்றால் தாக்குதல் நடத்தியுள்ளது. அவர்கள் புரிந்துள்ள அட்டகாசத்தில் அந்த நிறுவனத்துக்கு ஏறத்தாழ 18 கோடியே 40 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டிருப் பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் எம்.ரி.வி வளவுக்குள் அதற்கு முந்திய நாள் இனந் தெரியாதவர்களால் கைக்குண்டு வீசப்பட்டிருந்தது. இந்தத் தொலைக் காட்சியகம் ஏற்கனவே இலக்கு வைக்கப்பட்டி ருந்த போதிலும் பொலிஸ் காவல் எதுவும் வழங்கப்பட்டிருக்க வில்லை.

இரண்டு தினங்களுக்குப் பிறகு, ஜனவரி 8 ஆம் திகதி, 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க தமது பத்திரிகை அலுவலகத்துக்குப் போய்க்கொண்டிருந்தபோது ஆயுதம் தரித்த சிலர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்திருந்தார்கள். அதற்கு முன்பு புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் சில நபரர்கள் நுகேகொடையிலுள்ள தமது வீட்டுக்கருகில் சுற்றித் திரிவதாக லஸந்த தமது நண்பர்களுக்கு கூறியிருந்துள்ளார். அன்றைய தினம் வியாழக்கிழமை காலையில் ரத்மலானையிலுள்ள தமது பணிமனைக்கு அருகில் சென்றபோது முகமூடி அணிந்த சிலர் அவரது காரை வழிமறித்து நிறுத்தியிருக்கிறார்கள். கார்க் கண்ணாடிகளை நொறுக்கி சைலென் சர் பொருத்திய பிஸ்டலால் மிக அருகிலிருந்து அவரைச் சுட்டிருக்கிறார்கள். அவர் களுபோவில ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவர்கள் மூன்று மணிநேரம் போராடியும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.



இந்தச் சம்பவத்தை அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டித்துள்ளன. விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கும்படி அவை கேட்டுள்ளன.

அமெரிக்க கண்டனம் அந்நாட்டின் தூதுவர் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பொன்றையடுத்து வெளிவந்தது. இலங்கை பத்திரிகையாளர் கல்லூரியின் பட்டமளிப்பு நிகழ்வொன்றில் அமெரிக்கத் தூதுவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். இது விக்கிரமதுங்க சுடப்பட்டதற்கு முந்திய தினம். இலங்கையில் சுயாதீன பத்திரிகைத்துறை நடத்தப்படும் விதம் குறித்து அமெரிக்க தூதுவர் கண்டித்துள்ளார். சில கோரிக்கைகளையும் அவர் முன் வைத்திருந்தார்.

இந்தியாவும் இந்தக் கொலையைக் கண்டித்துள்ளது. ஜனநாயகத்தின் மிக முக்கிய சக்தியாக ஊடக சுதந்திரம் விளங்குகின்றது. இம்மாதிரித் தாக்குதல்கள் இலங்கையில் ஜனநாயக சுதந்திரத்திற்கு மிக ஆபத்தானதாக இருக்கப் போகிறது என்று இந்தியா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஊடகத்துறையினர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருப்பது இது முதல்தடவையல்ல. கடந்த வருடம் நேஷன் பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கெயித் நொயர் கடத்தப்பட்டு ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அதன்பின் லங்கா பத்திரிகை நிறுவனத்தின் நாமல்பெரேராவும் பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த மகேந்திர ரட்ணவீரவும் வழிமறிக்கப்பட்டு குரூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது போலவே அந்தச் சமயங்களிலும் கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. அரசாங்கம் தனது தரப்பில் சம்பந்தப்பட்டவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என அறிவித்திருந்தது. ஆனால் இந்தச் சம்பவங்களில் தொடர்புடைய எவருமே இன்னமும் கைது செய்யப்படவுமில்லை தண்டிக்கப்படவுமில்லை.

'சிரச' தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது நடந்த தாக்குதல் அந்த நிறுவன உரிமை யாளர்களாலேயே நடத்தப்பட்டிருப்பதாகவும் பெருமளவு காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்காக அப்படிச் செய்யப்பட்டிருப்பதாகவும் சிலர் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். ரைபிள்கள், பிஸ்டல்கள், எறிகுண்டுகள், கண்ணி வெடிகள் போன்ற ஆயுதங்களைக் கொண்ட ஆள்களை எவ்வாறு எங்கிருந்து உரிமையாளர்களால் பெற்றிருக்க முடியும்? சம்பந்தப்பட்டவர்கள் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களாயின் இன்னொரு பயங்கரவாத அச்சுறுத்தல் ஒன்று தோன்றியுள்ளதா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

'சண்டே லீடர்' ஆசிரியர் கொலையைப் பொறுத்தவரை அவருக்கு எதிரிகள் ஏராளமாக இருந்துள்ளார்கள் என்று சில அதிகாரிகள் கூறுகிறார்கள். அது உண்மை தான். ஆனால் முகமூடி அணிந்த ஆசாமிகள் சைலென்சர் பூட்டிய பிஸ்டல்களுடன் பட்டப்பகல் வேளையில் பரபரப்பான தெரு வீதிகளில் மோட்டார்சைக்கிள்களில் எப்படி பிரயாணம் செய்ய முடிகிறது? சம்பவம் நடந்துள்ள பகுதி கொழும்பில் ஏனைய பகுதிகள் போன்றே படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர் போன்றவர்களால் நிரம்பிவழியும் பகுதியாகும். இந்தப் பகுதியில் இந்த அளவு சுதந்திரமாக விடுதலைப்புலிகளால் பயணம் செய்ய முடியாது என்பது எவரும் அறிந்ததே. (ப)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 29 | 13.01.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.இ.04.21வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | மாலை 06.17வரை |
| சுபநேரம்: | 11.04 - 12.34 |
| ராகுகாலம்: | 03.34 - 05.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலி.கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் நீர்வேலிக் கிராமிய வங்கிக் கிளையின் முகாமையாளராக மிக நீண்ட காலம் பணியாற்றிய

**ச.க. முருகையா**

தனது 39 வருடகூட்டுறவுச் சேவையை நிறைவு செய்து மக்களின் நன் மதிப்புடன் இன்று (12.01.2009) திங்கட்கிழமை பணி ஓய்வு பெறு கிறார். இவரது பணியைப் பாராட்டி மதிப்பளிக்கும் இவ்வேளையில் தனது சமய,சமூக பணிகளை மேலும் சிறப்புற மேற்கொள்ள எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் புரிவாராக.

நீர்வேலி கிராமிய வங்கி, வாடிக்கையாளர்களும் நலன்விரும்பிகளும்.

(9/536620)

# சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம்

**12.01.2009**

இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி

அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் தலைமையில் சுவாமி விவேகானந்தரும் இன்றைய இளைஞர்களும் என்ற தொடரில் - சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்) க.பொ.த. உயர் தர வகுப்பு மாணவர்களுடன் கலந்துரை யாடுவார்.

**16.01.2009** யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இந்து மன்றம் நடத்தும் சுவாமி விவேகானந்தர் விழா அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார்

**17.01.2009**

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறையில் சுவாமிஜியின் 147 ஆவது ஜன்ம தினம் அனுஷ்டிக்கப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. செயலாளர்.

# முதலாம் ஆண்டு நினைவுகளில்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 25 |
| 06 | 12 |
| 1932 | 2007 |

**திருமதி கந்தையா கனகம்மா**

ஆண்டொன்று சென்றாலும் அம்மா ஆறாது எம்துயரம் பாசத்தின் உறைவிடமாய் நன்னெறி தவறாது வாழ்ந்து எமக்கு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# தொழில் வாய்ப்பு பயிற்சி நிறுவனம்
VOCATIONAL ORIENTED TRAINING ORGANIZATION
வடமராட்சியில் தொழில் பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 15.01.2009 - 18.01.2009

- கொம்பியூட்டர் காட்வெயார் (3 மாதம்)
- மின் தொழில்நுட்பம் (ELECTRICAL) 6(மாதம்)Singal Phase, Three Phase மோட்டார் றீவைபிண்டிங் (2 மாதம்)
- குளிர்சாதன இயந்திரங்கள் Refrigeration and Air Conditioning திருத்தும் பயிற்சி Frige (2 மாதம்), A.C. (3 மாதம்)
- மோட்டார் வாகன பொறியியல் மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை மோட்டார் சைக்கிள் (4 மாதம்), நீர் இறைக்கும் இயந்திரம் (2 மாதம்)

05) வாகனங்களுக்கான மின் இணைப்பு (3 மாதம்) வாகன பெயின்டிங் பயிற்சி
06)றேடியோ, CD, மொனிற்றர், U.P.S பயிற்சிநெறி. Radio - (2 மாதம்) .T.V.- (3 மாதம்) CD (2 மாதம்) U.P.S (2 மாதம்)

- வெல்டிங் - Gas Air welding (4 மாதம்)

சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறும். தொழில் செய்வோருக்கான பகுதிநேர வகுப்புகளும் நடைபெறும்.

யாழ். தொழிற் பயிற்சி கல்வி மையம், சிலையடி, மந்திகை, புலோலி (சிறிபத்திரகாளி...)

T.P. 0779152617



## தவறிவிட்டது

நீர்வேலி மேற்கு, நீர்வேலி என்னும்முகவரி யுடைய மயில்வாகனம் கிரிதாஸ் என்பவரின் தேசிய அடையாள அட்டை (901373469V), வி.அ.அ., மாணவர் அ. அட்டை என்பன அடங் கிய பேர்ஸ் நீர்வேலி பிர தேசத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியு டன் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

NP/ML xxxx தொடரிலக்கமுடைய Hero Honda Passion Plus மோட்டார் சைக்கிள், $P_4$ Intel Computer என்பன உடன் விற்பனைக்குண்டு தொடர்பு

T.P. 222 2444

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு சாவகச்சேரி என்னும் முக வரி உடைய ஆறுமுகம் தம்பு பிள்ளை என்பவ ரது தே.அ.அட்டை (510190?20V) மோட்டார் சைக்கிள், சாரதி அனுமதிப்பத்திரம், வி.சே.அட்டை என்பன மட் டுவிலுக்கும், சாவகச்சேரிக்கு மிடை யில் 09.01.2009 அன்று தவறிவிட்டன. கண்டெ டுத்தவர்கள் அம்பிகா மருந்தகம், சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும். T.P. [illegible]1697950


# மேலூர் ஒரு தொகுதி மரக்கறிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் திற்கு மேலும் ஒரு தொகுதி மரக்கறி வகை கள் நேற்று விமானம் மூலம் எடுத்துவரப் பட்டுள்ளன.

தக்காளிப்பழம், பட்டர்போஞ்சி, கரட், பச்சைமிளகாய் போன்ற மரக்கறிகள் தம்புள்ளையில் கொள்வனவு செய்யப் பட்டு விமானங்களில் கொண்டு வரப்பட் டன என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்த மரக்கறி வகைகள் நேற்று உடன டியாகவே சங்க கிளைகள் ஊடாகவும் நட மாடும் விற்பனை நிலையம் ஊடாகவும் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டன.

தக்காளிப்பழம், பட்டர் போஞ்சி போன் றன கிலோ 550 ரூபாவுக்கும், கரட் கிலோ 200 ரூபாவுக்கும், பச்சைமிளகாய் கிலோ 500ரூபாவுக்கும் கத்தரிக்காய் கிலோ 180ரூபாவுக்கும் விற்கப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (224)

# சாவகச்சேரி இந்து ஆரம்ப வகுப்புக்கள் புதிய கட்டடத்தில்

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை யில் தரம் ஒன்று மாணவர்களுக்கான வகுப் புக்கள் சாவகச்சேரி தாமோதரப்பிள்ளை வீதியில் உள்ள காணியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

தரம் 1மாணவர்களுக்கான இந்த தற் காலிக கட்டடம், கல்வி பயிலும் மாண வர்களின் பெற்றோர்களின் பங்களிப்பு டன் அமைக்கப்பட்டது. இந்த வகுப்ப றைத் தொகுதி தற்காலிகமாக அமைக்கப் பட்டாலும் மாணவர்களுக்கான சகல வச திகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். (131)

## கால்கோள் விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.12

அளவெட்டி அருணாசலம் வித்தியால யத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான கால்கோள்விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நி கழ்வில் அருணோ தயக் கல்லூரியின் ஓய்வுபெற்ற உப அதிபர் ந.பத்மநாதன் பிரதம விருந்தி ராகக் கலந்து கொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.12

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பபிரிவின் கால்கோள் விழா இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடை பெறும் இந் நிகழ் வில் இளைப்பாறிய திட்டப் பணிப்பா ளரும் ஸ்கந்தா பழைய மாணவர் சங்கச் செயலாளரு மான த.தேவராஜா தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும் வலிகாமம் வலய ஆரம்பப்பிரிவு ஆசி ரிய ஆலோசகர் திரு மதி தயாபரராஜா சிறப்பு விருந்தினரா கவும் கலந்து கொள் வர். (1)

(மேலும் செய்திகள் 12ஆம் பக்கம்)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் பதுமைநிதி



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிட மாகவும் கருங்காலியை வசிப்பிடமா கவும் கொண்ட காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் மனைவி பதுமை நிதி 08.01.2009 வியாழக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் நீலகிரி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர். (81742) தகவல்: பிள்ளைகள்.

## துரைராஜா கணேசன்

(சுவிஷேச பாடகரும் பியானோ இயக்குநரும்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் 261/7, கண்டி வீதி, யாழ்ப்பா ணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா கணேசன் நேற்று (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் துரைராசா மற்றும் காலஞ் சென்ற பாக்கியம் தம்பதியினரின் மூத்த புதல்வனும் திலகராணியின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, மரியதாஸ்(டோகா), காலஞ் சென்றவர்களான ஞானதாஸ், ஞானமலர் மற்றும் ஞான சுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் விமலராணி சிவம், மகேந்திரன், தெய்வேந் திரன், கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரு மாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை ஊழியர்கள், போதகர்கள், விசுவாசிகள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

261/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (81748) தகவல்: திலகராணி (மனைவி).

## தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்

(வேலணை வடக்கு)



வேலணை வடக்கு, சோளாவத்தை யைப் பிறப்பிடமாகவும் சங்கானையைத் தற் காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தாமோத ரம்பிள்ளை மயில்வாகனம் 10.01.2009 சனிக் கிழமை சங்கானையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் கந்தவேள் (நெதர்லாந்து), விஜயலட்சுமி (கொழும்பு), குமரவேள் (சுவிஸ்), யோகவேள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் புஸ்பகாந்தி (நெதர் லாந்து), ஜெகதீஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரி (சுவிஸ்), ஞானேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிசா (நெதர்லாந்து), கபிசன் (நெதர்லாந்து), சிந்துரன் (கனடா), மது ரிகா (கொழும்பு), மதுரன் (கொழும்பு), குகதாஸ் (சுவிஸ்), சுபீத் (சுவிஸ்), புருஷோத்தமன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர னும் காலஞ்சென்ற அன்னம்மா, இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2009) திங் கட்கிழமை பி.ப. 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கானை தேவாலய வீதியிலுள்ள காரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தேவாலய வீதி, சங்கானை. (81740) பொ.ஜெகதீஸ்வரன் (மருமகன்), விமலராஜ் (சங்கானை).

## திருமதி நவரத்தினராசா யோகாம்பிகை

(யோகா)



காலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினராசா யோகாம்பிகை நேற்று (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத் தினசபாபதி மற்றும் பத்மாவதி தம் பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மரு மகளும் நவரத்தினராசாவின் (நவராஜன் - ஆசிரியர்) அன்பு மனைவியும் பவனொளிபவனின் (மாணவன் - மானிப் பாய் இந்துக் கல்லூரி) பாசமிகு தாயாரும் அம்பிகை யின் (பாவ) அன்புச் சகோதரியும் புவனேந்திரனின் மைத்துனியும் நிரஞ்சன் (ஜேர்மன்), நிர்மலன் (ஜேர்மன்), நிருபன் (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி, மானிப்பாய். (81747) தகவல்: ந.நவரத்தினராசா (கணவர்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை குறித்த மத்திய அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வற்புறுத்துமாறு கருணாநிதிக்குக் கடிதம்

## சுவிஸ் தமிழர் பேரவை அனுப்பியது

ஜெனிவா, ஜன.12

ஈழத் தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள இன்றைய தருணத்தில் தமிழர் தாயகத்தில் நடைபெறும் இன அழிப்புப் போரை உடன் நிறுத்தவும், இது தொடர்பிலான இந்திய மத்திய அரசின் தெளிவான நிலைப்பாட்டை வெளிப் படுத்தவும் மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுவிஸ் தமிழர் பேரவை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

சுவிஸில் வாழும் 43 ஆயிரம் ஈழத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அமைப்பு கருணாநிதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தமிழன் வாழாத நாடு இல்லை, ஆனாலும் தமிழருக்கு என்றொரு நாடு இல்லை என்ற இழிசொல்லை மாற்றிஅமைப்பதற்காக, ஈழத்தில் உரிமை கோரிப் போராடும் தமிழ் மக்களுக்காக இன்று உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ்மக்கள் நேசக்கரம் நீட்டி வருகின்றார்கள். அந்த வரிசையில் தங்களின் வரலாற்றுப் பாத்திரத்தை நன்குணர்ந்து, தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற போரை நிறுத்தி தமிழ் மக்களை இன அழிப்பிலிருந்து காப்பதற்காக தமிழக சட்ட சபையில் நீங்கள் நிறைவேற்றிய தீர்மானமும், அதனைத் தொடர்ந்து புதுடில்லி சென்று பாரதப் பிரதமரை நீங்கள் சந்தித்து கோரிக்கை வைத்ததும் ஈழத் தமிழ் மக்கள் மனங்களில் பாலை வார்த்தது.

இவற்றைத்தொடர்ந்து, காரியங்கள் வேகமாக நடக்கும், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கொழும்பு செல்வார், போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால், நாம் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மாறாக, தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் முன்னைவிட அதிகரித்துள்ளன.

இந்திய மத்திய அரசின் கொள்கையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சமாதான வழிமுறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி வரும் இந்தியா, மறுபுறத்தில் சிங்களதேசத்துக்குப் படைத்துறை உதவிகளை வழங்கிவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈழத் தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள இன்றைய தருணத்தில் தமிழர் தாயகத்தில் நடைபெறும் இன அழிப்புப் போரை உடன் நிறுத்தவும், இது தொடர்பிலான இந்திய மத்திய அரசின் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.-என்றுள்ளது. (அ-1)

# ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முறைப்பாடு

கொழும்பு, ஜன.12

இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கிம், சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர, மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் ஊடக சுதந்திரத்துக்கும் ஊடகவியலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தற்போதைய ஆபத்தான நிலைமைகள் தொடர்பாக விவரித்தனர்.

அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையில் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்க உரிய அழுத்தங்கள் கொடுக்கப்படும் என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் இச்சந்திப்பில் உறுதியளித்திருப்பதாகத் தெரிகிறது. (அ-1)

# சாரணிய செயற்பாட்டில் யாழ்.மாவட்டம் அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜன.12

அகில இலங்கை ரீதியில் 2008ஆம் ஆண்டின் சாரணிய செயற்பாட்டில் யாழ். மாவட்டம் மூன்றாமிடம் பெற்றுள்ளது.

சாரணியத் தலைவர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆணையாளர் G.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் யாழ்.மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாகாண ஆணையாளர் என்.போஜன், உதவி மாவட்ட ஆணையாளர் எஸ்.தேவரஞ்சன், டாக்டர் தில்லைவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய மாவட்ட ஆணையாளர், மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டுக்கு முன்னர் அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது சாரணிய செயற்பாடு மந்த நிலையில் இருந்தது. ஆனால் 2008ஆம் ஆண்டு அனைவரினதும் முயற்சியாலும் நாம் இந்த நிலையை அடைந்துள்ளோம். இனிவரும் காலங்களில் இவ்விடத்தை தக்கவைத்து முந்நிலை பெறவேண்டும்.

இந்த ஆண்டு எமது சாரணியத்தில் இன்னும் ஆயிரம் சாரணர்களை இணைத்து அவர்களுக்கு சாரணிய அறிவை ஊட்டி எதிர்காலத்தில் நல்லதொரு பிரஜையை உருவாக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (202-325)

# புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.ச.கிளைகளில் நியாய விலையில் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அரிசி, மா, சீனி, மண்எண்ணெய், பால்மா வகைகள் என்பவற்றை நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள முடியும் என சங்கத்தின் தலைவர் டாக்டர் க.இராஜரெட்ணம் தெரிவித்தார். (202)

# 19 பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்குக் கற்றல் உபகரணங்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

மட்டுவில் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, நாவற்குழி அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை.

கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயம், யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (202)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில்

# இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 'சோஆ' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், ஜன.12

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு 'சோஆ' நிறுவனம் உதவியுள்ளது. 33 லட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

இந்த நிவாரணப் பொருள்கள் ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு உட்பட ஊர்காவற்றுறை பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

ஒரு அங்கத்தவர் உள்ள குடும்பத்துக்கு 1291.75 ரூபா பெறுமதியான பொருள்களும் 2 - 3 அங்கத்தவர் உள்ள குடும்பத்துக்கு 1579.75 ரூபா பெறுமதியான பொருள்களும் -

4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு 1771.75 ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கப்பட்டன என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை தெரிவித்தது. (202-325)

# தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

# சுவாமி விவேகானந்தரின் இளைஞர்தின விழாவையொட்டி விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.12

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொதுநூலகம் சுவாமி விவேகானந்தரின் இளைஞர் தின விழாவையொட்டி விசேட கருத்தரங்கை நடத்தவுள்ளது.

நூலக ஆலோசனைச் சபை பொருளாளர் சி.சிவகாந்தன் தலைமையில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம், மட்டுவில் சந்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரைகள் வழங்கவுள்ளனர்.

''சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார்'' என்னும் தலைப்பில் தாவடி ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதிச் செயலாளர் சிவசுப்பிரமணியம் சிவமோகன் விசேட உரை வழங்கவுள்ளார். (204)

## சமய சந்நிதிகளில்

வண்ணை, ஜன.12

யாழ்.கடற்கரைவீதி புனித செபஸ்தியார் தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 4.15 மணிக்கு நற் கருணை விழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 6.15 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்றைய தினம் பி.ப. 3.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு சொரூப ஆசீர் வழங்கலுடன் திருவிழா நிறைவடையுமென பங்குத் தந்தை ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார். (202-160)

* * *

யாழ்ப்பாணம், ஜன.12

சுழிபுரம் அருள்மிகு வீரபத்திரசுவாமி உடனுறையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ''ஏகாதின லட்சார்ச்சனைப் பெருவிழா'' நடைபெறவுள்ளது.

இந்த விழா, எதிர்வரும் வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும். (204-112)



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'மகேஸ்வரன் தருமசுரபி' மண்டபம் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. திறப்புவிழா நிகழ்வில் மண்டபத்தை மூதறிஞர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் மகேஸ்வரன் பிறந்தநாள் அறக்கொடை நிதியாக ஒரு தொகைப் பணத்தை தெல்லிப்பழை சைவச்சிறார் இல்லத்துக்கென தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகனிடம் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி நகரசபையின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் நகரசபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி ச.அம்பிகைபாகன் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் உரையாற்றுவதையும் முதலிரு படங்களிலும் காணலாம்.
நகரசபையின் ''நகரபணி'' சிறப்பு மலரை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வீ.வீ.மகாலிங்கத்துக்கு வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்:தென்னவன்)

# செயலமர்வு

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களின் முறைசாராக் கல்வி, விசேட கல்வி ஆளணியினருக்கான திட்டமிடற் செயலமர்வு எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சகல கோட்டக்கல்வி அதிகாரிகள், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர்கள், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், விசேட கல்வி ஆலோசகர்கள், முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத் தலைவர்
திரு. நா.நித்தியானந்தன் (ஜே.பி, பொற்பதி வீதி, கொக்குவில்) அவர்களின் பாசமிகு தாய்
திருமதி அன்னம்மா நாகலிங்கம் (பொன்னடி)
அவர்கள் லண்டனில் இயற்கை எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சாயி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!
ஸ்ரீ சாயி துர்க்கா ஆலயம்,
கொக்குவில். (81733)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையிடம் (கரவெட்டி) 07✱12✱1933
அரனிடம் (மானிப்பாய்) 14✱12✱2008

கரவெட்டியூர் கலைமாமணி
அமரர் அண்ணாமலை மகாதேவன்
(இளைப்பாறிய ஆங்கில விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர், ஓவியர்-London Kensington Hons Cert. in Drawing ''அன்றொருநாள்'' புகழ் பிரபல நாடக இயக்குநர், தயாரிப்பாளர்-மதிஸ் புறொடக்ஷன்ஸ் & ஸ்ரீ லக்ஷ்மீஸ் புறொடக்ஷன்ஸ், கவிஞர், இசையமைப்பாளர், பரதநாட்டியக் கலைஞர்)

கடந்த 14.12.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கரவெட்டியூர் ''கலைமாமணி'' அமரர் அண்ணாமலை மகாதேவன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(13.01.2009) செவ்வாய்க் கிழமை முற்பகல் 8 மணியளவில் வில்லூன்றி அந்தியேட்டி மடத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அதேதினம் முற்பகல் 11 மணியளவில் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். என்றும் நினைவுடன்:
மானிப்பாய் வடக்கு,மானிப்பாய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாரிஜாதம் செல்வரட்ணம்

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாரிஜாதம் செல்வரட்ணம் (07.01.2009) புதன்கிழமை பிரான்சில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு செல்வரட்ணத்தின் (மேற்பார்வையாளர், துறைமுக அதிகாரசபை) அன்பு மனைவியும் பிரேமா, ஹேமா, ஜெயராஜ், விமலா, நிஜி ஆகியோரின் அன்புத் தாயும் ஸ்ரீகுமார், மோகனதாஸ், மல்லிகா, பாலமுருகன், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் பிருந்தன், ஜதுர்ஷன், அஸ்விந்தா, அஸ்விந், அஸ்லினி, தயானி, அபினாஷ், ஆதீஸ், தரணிதன், ஆர்தி, அத்வைதன், சுலக்ஷன், சாருஷன், சம்ஸிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நவநீதம், இந்திரா ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற நித்தியானந்தம் மற்றும் இராஜேஸ்வரி காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சத்தியதாசன் (முன்னாள் அதிபர் றோ.க.ம.வி.நாரந்தனை) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2009) திங்கட் கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
பிள்ளைகள்
கொழும்பு. (81736) (சீதா - ஸ்ரீகுமார்)


## போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

முறைசாராத் தொழில்திறன் பயிற்சி நெறிக்கான போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

2 வருட அனுபவம் கொண்டவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

10 கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (204)


## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
THE REFUGEES REHABILITATION ORGANIZATION
TRRO Ltd

- முயற்சி -
தொழில்வாய்ப்பு பயிற்சி நெறிக்கான புதிய பிரிவுகள்ஆரம்பமாகின்றன

கணினி தட்டச்சு
தட்டச்சு(தமிழ், ஆங்கிலம்)
தையல் பயிற்சி, Saree Work & Painting

1 பதிவுக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்.
2 குறுகிய காலப்பயிற்சி நெறிகள்.

Computer Courses
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Information Communication Technology (ICT)

- பயிற்சி வகுப்புகள் வார, வார இறுதிநாட்களில், நடைபெறும்.
- யாழ்ப்பாணம், கட்டுடை, இணுவில் ஆகிய இடங்களில் 16.01.2009, 17.01.2009 நாட்களில் பயிற்சி நெறிகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

விண்ணப்ப படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி

| தலைவர், | தலைவர், | தலைவர், |
|---|---|---|
| அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். | அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் M.C.Leod வைத்தியசாலை இணுவில். | அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கட்டுடை, மானிப்பாய் |


## கலந்துரையாடலும் பதிவு மேற்கொள்ளலும்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடலும் பதிவுகள் மேற்கொள்ளலும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்களைக் குறிப்பிட்ட நேரத்துக்கு யாழ்.பெருமாள் கோயிலுக்கு முன்பாக ஒன்றுகூடுமாறு புதிய செயற்குழு கேட்டுள்ளது. (202)


## தவறிவிட்டது

தோப்புக்காடு, காரைநகர் என்னும் முகவரியுடைய நாகன் தவமலர் என்பவரின் தே.அ.அ (688172497V), இராணுவ அ.அ (0901021094), தொழில் அ.அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் காரைநகருக்கும், ஓட்டுமடச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 363, ஒஸ்மானியா கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

சைக்கிள் கடை ஒன்றிற்கு சைக்கிள் திருத்த வேலைகள் முழுமையாகத் தெரிந்த ஒருவர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு! சித்தி விநாயகர்
தொ.பே:- 0774163146
1057, கே.கே.எஸ்.றோட்,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

07.01.2009 அன்று நீர்வேலி மேற்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் கஜகரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை(780112620V) கச்சாய் வீதியூடாக சாவகச்சேரியிலிருந்து ஏ-9 வீதியூடாக கோப்பாய் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட முகவரியுடனோ அல்லது தொ.பே. 0776159632 இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

Now We Start Supply @ Jaffna யாழ் நகரில்
Intel, Kingston, Samsung, Viewsonic, ASUS
கணனி உதிரிப்பாகங்களை யாழ் நகரில் விநியோகம் செய்யும் எம்முடன் இணைந்து மீள் விற்பனையாளர்களாக செயலாற்ற உங்களுக்கும் அரிய வாய்ப்பு
HP, Canon, Epson, Lexmark, Brother, Toshiba
Original Toners & Ink Cartridge
கொழும்பு, கல்முனை, புத்தளம், திருகோணமலை...
Now @ Jaffna .. யாழ்ப்பாணம்
Intel MEMBER
DIGITWAY SYSTEM
784, Potpathy Road, Kokuvil, Jaffna.
011 2505663/ 071 4813956

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1053 சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
கடகம் 09 12 14 36
09-01-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500364769 - 500385849
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,360 | 20/- | 4,407,200/- |
| 2 இலக்கங்கள் | 20,230 | 40/- | 809,200/- |
| 1 இல. + லக்கினம் | 20,085 | 60/- | 1,205,100/- |
| 2 இல. + லக்கினம் | 1,828 | 200/- | 365,600/- |
| 3 இலக்கங்கள் | 537 | 1000/- | 537,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,474,100/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 263,103 | | 8,974,100/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,984,000/-

தொடர் இலக்கம் 400372473 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 ஜனவரி 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 500379528-2-06 |
| மாத்தறை | 500367511-7-20 |
| இரத்தினபுரி | 500372376-9-32 |
| பொலன்னறுவை | 500367000-6-30 |
| பதுளை | 500376226-3-40 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.நகர் - ஊர்காவற்றுறைக்கான

# 780 இலக்க பஸ் சேவை சீரில்லை; மாணவர்களின் கற்றலில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.நகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு சேவையிலீடுபடும் 780 பஸ் சேவை சீரின்மையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படுகின்றது.

குறிப்பாக ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் போக்குவரத்துச் சீரின்மையால் பாடசாலைக்குப் பிந்தியே சமுகமளிக்கின்றனர். இதனால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அவர்கள் முழுமையாகப் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படுகின்றது என கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி சகாயநாயகி கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

எமது பாடசாலையின் கணிசமான மாணவர்கள் வேலணை, புளியங்கூடல், சின்னமடு, சரவணை, சுருவில் போன்ற இடங்களிலிருந்தே வருகை தருகின்றார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 780 பஸ்ஸிலேயே பயணிக்கிறார்கள். இம் மாணவர்களை ஏற்றிக் கொண்டு பஸ் காலை 9.00-9.15 க்கே வந்து சேர்கிறது. இதனால் இம் மாணவிகள் காலை செபத்திலோ, உடற்பயிற்சியிலோ பங்கு பற்றுவதில்லை. மாணவர்கள் வந்ததும் பாடங்கள் ஆரம்பித்து விடும். இதனால் மாணவர்கள் பெரிதும் மனக் குழப்பத்துக்குள்ளாகி கல்வியில் வீழ்ச்சியைக் கண்டுள்ளனர்.

பிற்பகல் 2.15 க்கு பாடசாலை விடும் போது பஸ் உடனே வந்து விடுகிறது. அதாவது இந்த பஸ்ஸிற்கு பிறகு வேறு எந்த பஸ்ஸும் 780 பாதையினூடாகச் செல்வதில்லை. இதனால் மாணவர்களின் இணைப்பாட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

எமது பாடசாலை உடற்பயிற்சிப் போட்டி மற்றும் கரப்பந்து, பூப்பந்து, வலைப்பந்து போட்டிகள் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் கோட்டம், வலயம் தாண்டி யாழ்.மாவட்டத்தில் பங்குபற்றி பல இடங்களைப் பெற்று வளர்ந்துவரும் பாடசாலையாகவும் சிறந்த மாணவிகளை எதிர்காலதில் உருவாக்குகின்ற பாடசாலையாகவும் இருந்து வருகின்றது. இவ்வாறான போக்குவரத்துச் சேவையினால் மாணவிகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. இப்போதுள்ள போக்குவரத்து சேவையினால் இம்மாணவிகள் மேற்குறிப்பிட்ட போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை இழக்கின்றனர். இதைவிட சில பாடங்களை மாலை நேரத்தில் நடத்த முடியாதுள்ள நிலைமை காணப்படுகிறது. இம் மாணவர்கள் பெரிதும் விளையாட்டுத் துறையிலும், கல்வித் துறையிலும் வீழ்ச்சி கண்டு வருகின்றனர்.

எனவே யாழ்.மாவட்ட போக்குவரத்துச் சபை இச்சேவையை எமது பாடசாலையில் காலை 8.20 மணிக்கு பஸ் வரும் படியாகவும் மாலை 2.30 க்கு ஒரு பஸ்ஸும் மாலை 3.30 க்கு ஒரு பஸ்ஸும் விடும் படியாக கேட்டுக்கொள்கின்றேன்- என்றார்.

(202-325)

# புகையிரத ஆணைச்சீட்டு விநியோகம்; புதிய சுற்றறிக்கை வெளியீடு

அச்சுவேலி, ஜன.12

வடக்கு மாகாண திறைசேரி "விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு விநியோகமும் ஏற்பட்ட செலவை மீளச் செலுத்தலும்" என்ற தலைப்பில் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2008/12/16 ஆம் திகதிய 20/2007(II) இலக்க சுற்றறிக்கையில் புதிய நடைமுறை தொடர்பாக விவரிக்கப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

* PT/ 20/2007(I) ம் சுற்று நிருபத்தின் பந்தி(II) இல் பாவிக்கப்படாமல் இருக்கும் புகையிரத ஆணைச்சீட்டுக்கள் என்பதன் கருத்து குறிப்பிட்ட திகதியில் அவ் உத்தியோகத்தர்கள் பெறத் தகுதி உடையதாகும். அத் திகதியில் பாவிக்கப்படாது மீதியாக உள்ளதுமான ஆணைச்சீட்டுக்களின் எண்ணிக்கையே குறிப்பிடுகின்றது.

* எனவே கப்பலில் பிரயாணம் செய்யும் திகதியில் அதுவரை பெறத் தகுதியான ஆணைச் சீட்டுக்களை பெற்று அவற்றை இரத்துச் செய்து அவற்றின் காசுப் பெறுமதி அல்லது கப்பல் பிரயாணச் சீட்டின் காசுப் பெறுமதி இரண்டில் எது குறைவோ அத்தொகையை மீளப்பெறும் போது ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்ட ஆணைச்சீட்டுக்களை உறுதிச்சீட்டுடன் இணைத்துப் பெறமுடியும்.

* மூன்று ஆணைச்சீட்டுக்களுக்கான காசுப் பெறுமதியை மீளப்பெறுவதாயின் வருட இறுதியில் பிரயாணம் செய்தால் மட்டும் ஒரு தடவை பிரயாணம் செய்த கப்பல் பிரயாணச்சீட்டை சமர்ப்பித்து பந்தி 3 இல் கூறப்பட்டது போன்று காசை மீளப்பெற முடியும்.

* இந்த மீளளிப்பானது ஒரு சலுகை என்ற அடிப்படையில் பின்வருமாறு மீளளிக்க முடியும்.

(I) ஜனவரி முதல் ஏப்ரல் மாத காலத்தினுள் பிரயாணம் செய்திருப்பின் -ஒரு சோடி மட்டும்

(II) மே முதல் ஓகஸ்ட் மாத காலத்தினுள் பிரயாணம் செய்திருப்பின் - இரு சோடிகள் மட்டும்

(III) செப்ரெம்பர் முதல் டிசெம்பர் மாத காலத்துக்குள் பிரயாணம் செய்திருப்பின் - மூன்று சோடிகள்

ஆனால் பிரயாணம் செய்யும்போது குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து ஆணைச்சீட்டுக்களைப் பெற்று, இரத்துச் செய்து, அவற்றை உறுதிச் சீட்டுடன், பிரயாணம் செய்து ஒரு மாத காலத்துக்குள் நிதி ஆண்டு முடிவதற்கு முன் சமர்ப்பித்தால் மட்டுமே மீளளிப்பு மேற்கொள்ள முடியும். அடுத்த நிதியாண்டில் அக்கொடுப்பனவைப் பெறமுடியாது- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-11)



பருத்தித்துறை தும்பளை அஞ்சலியகத்தில் இடம்பெற்ற புதுவருட ஆராதனையில் கலந்து கொண்ட சிறார்களுக்கு பைக்கற்றில் அடைக்கப்பட்ட பால் வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:[illegible])

# செய்திச் சரம்... செய்திச் சரம்...

## முட்டை விலை வீழ்ச்சி

கோப்பாய்,ஜன.12

முட்டையின் விலை தற்போது வீழ்ச்சி கண்டு வருகிறது.

அண்மைக்காலமாக முட்டையொன்று 25 ரூபா வரை விற்கப்பட்டு வந்துள்ளது. தற்போது 12 ரூபா முதல் 14 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(202-72)

## கோப்பாய்-கைதடி வீதியில் வாகனப் போக்குவரத்தும் இப்போது நடைபெறுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.12

கோப்பாய்-கைதடி வீதி வாகனப் போக்குவரத்துக்கும் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் இலங்கை போக்குவரத்துச் சபையின் 811 மார்க்க பஸ் சேவைகள் மீண்டும் இவ் வீதியூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி கடந்த மூன்று வருடங்களாக மூடப்பட்டிருந்த வேளையில் 811 மார்க்க பஸ் சேவை கோப்பாய்-முத்திரைச் சந்தி-செம்மணி-நாவற்குழி ஊடாக நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீதி திறக்கப்பட்டதால் தென்மராட்சி, வலிகாமம் பகுதி உற்பத்திப் பொருள்களைக் குறைந்த நேரத்தில் சந்தைகளுக்கு கொண்டு செல்லக் கூடியதாக உள்ளதாக வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் தெரிவித்தனர். (202-207)

## கைதடி தெற்கில் கலைவிழா

நாவற்குழி,ஜன.12

கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் கல்விப் பூங்கா மாணவர்களின் வருடாந்தக் கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் கடந்த வாரம் மின்னொளி கலை அரங்கிலே கைதடி தெற்கு சனசமூக நிலையத் தலைவர் கே.பத்மநாதன் தலைமையிலே நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

(202-288)

## வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத்தகடுகள்

ஆனைக்கோட்டை,ஜன.12

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வளர்க்கப்படும் வளர்ப்பு நாள்களுக்கு 2009 ஆம் ஆண்டுக்கான இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேச சபைக்கு உட்பட்ட உப அலுவலகங்களில் வளர்ப்பு நாய்களைப் பதிவு செய்து இவ்வாண்டுக்கான இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபை அறிவித்துள்ளது.

(202-20)

## வறிய மாணவருக்கு உதவு தொகை

நாவற்குழி,ஜன.12

வறுமைக் கோட்டுக்குட்பட்ட வறிய மாணவர்களுக்கு கல்விக்கான உதவு தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தினால் சுவிஸ் நாட்டில் வாழும் அங்கத்தவர்களின் அனுசரணையுடன் இந்த உதவுதொகை வழங்கப்பட்டது.

கழகத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மானிப்பாய் மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ப.சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (202-288)

## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் விநாயகர் முன்பள்ளி ஆசிரியர்கள் இவ்வாண்டில் தரம் ஒன்றுக்குச் செல்லும் மாணவர்களைக் கௌரவித்துள்ளனர்.

அண்மையில் ஆசிரியர் சி.செல்வமலர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (202)

## மானிப்பாய் பட்டின சபையின் ஆதனவரி மீள் மதிப்பீடு

ஆனைக்கோட்டை,ஜன.12

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட ஏழு வட்டாரங்களுக்கான ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்குரிய அறிவித்தல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன எனப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

மீள் மதிப்பீட்டு விவரங்களில் ஆட்சேபனைகள் ஏதாவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும், அவ்வாறு சமர்ப்பிககப்படாதவிடத்து இம்மீள் மதிப்பீட்டைத் தாங்கள் ஏற்றுக் கொண்டதாகக் கருதி ஆதனத்துக்குரிய வரியை மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் உரிய காலங்களில் செலுத்தி ஒத்துழைக்குமாறும் அதிபர் கேட்டுள்ளார். (202-20)

## சமூக மட்ட அமைப்பு தெரிவு

நாவற்குழி,ஜன.12

'கெயர்' சர்வதேச நிறுவனத்தின் லீவ்ற் திட்டம்-2 இன் திட்ட அமுலாக்கம் தொடர்பான சமூகம்சார் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலும், சமூகமட்ட அமைப்பைத் தெரிவு செய்யும் நிகழ்வும் அண்மையில் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது.

கைதடி தெற்கு ஜே/291, கைதடி தென்கிழக்கு ஜே/292 ஆகிய கிராம சேவைகள் பிரிவுகளின் கிராம அலுவலர் எஸ். இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'கெயர்' சர்வதேச நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஆர்.ரமணி மற்றும் வெளிக்கள இணைப்பாளர்கள் எம்.பிரபாகரன், என்.நந்தகோபன் ஆகியோர் கலந்து கொள்வர். (202-288)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு மூலதன நிதி கிடைத்தது

பண்டத்தரிப்பு,ஜன.12

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு 2008 ஆம் ஆண்டுக்கான மூலதன நன்கொடை நிதியாக 2 லட்சத்து 73 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் இந் நிதியினை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிதியில் ஒரு லட்சத்து 99 ஆயிரம் ரூபா சனசமூக நிலைய நன்கொடையாக 76 சனசமூக நிலையங்களுக்கும் பொது நூலக நன்கொடையாக 40 ஆயிரம் ரூபாவும் மகப்பேற்று நன்கொடையாக 18 ஆயிரம் ரூபாவும் மலசலகூட நன்கொடையாக 15 ஆயிரமும் பிரித்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை-விரைவில் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்குவதற்கான நடவடிக்கையை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மேற்கொண்டுள்ளார். (202-130)

## யாழ்.பிரதேச கலைஞர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.12

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கலைஞர்களது விவரம் சேகரிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## சுழிபுரத்தில் நெற்பயிர்கள் பன்றிகள், மாடுகளால் அழிப்பு

தொல்புரம்,ஜன.12

சுழிபுரம் பிரதேசத்தில் நெற்பயிர்கள் காட்டுப் பன்றிகளாலும் ஆடு, மாடுகளாலும் அழிக்கப்படுகின்றன.

தற்போது நிலவிவரும் கடும் வரட்சியால் நெற்பயிர்கள் கருகும் நிலை தோன்றியுள்ளது. இதனையடுத்து விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர் இறைத்து வருகின்றனர்.

இந்நிலையில் தப்பிப் பிழைத்துள்ள நெற்பயிர்களும் பன்றிகளாலும் மாடுகளாலும் அழிக்கப்படுகின்றமை குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (202-119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

12-01-2009 முதல் 18-01-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

மேஷம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத்தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

இடபம்



**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம்காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

மிதுனம்



**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்ப்பார்ப்பர், தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முத லீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மனஅமைதி இருக்காது.

கடகம்



**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதி கரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

சிம்மம்



**மகம், பூரம், உத்தரம் 1**

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால்லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம் . எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.

கன்னி



**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

துலாம்



**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமைய பலன் உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

விருச்சிகம்



**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.

தனுசு



**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகிஇருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

மகரம்



**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

கும்பம்



**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ் டம் உண்டு. தெய்வீகஎண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாக இடம் உண்டு. மன அமைதி இருக்காது.

மீனம்



**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**


காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவிபுரிவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.மனஅமைதி இருக்கும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## செல்லர் கனகலிங்கம்



கடந்த (13.12.2008) அன்று இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத் தலைவரின்
அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம்
(10.01.2009) சனிக்கிழமை
வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையில்
நடைபெற்றன.
இன்று (12.01.2009) திங்கட்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின்
வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நெஞ்சு கனத்த நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**
அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

தோற்றம் 11.09.1946

மறைவு 13.12.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.12

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் தரம் 1க்கான கால் கோள் விழா இன்று திங்கட் கிழமை முற்ப கல் 9.30 மணிக்குக் கல்லூரி கனிஷ்ட பிரிவு பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பாட்சாலை அதிபர் ந.பரமசிவம் தலை மையில் நடைபெறும் இந்த விழாவில், காரை நகர் கிராமிய வைத்தியசாலை வைத்திய அதி காரி கலாநிதி சு.சுவாமிநாதன் பிரதம விருந்தி னராகவும் இளைப்பாறிய அதிபர் சி.நவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை பிரம்மஸ்ரீ ஞா.ஞானசம்பந் தக் குருக்கள், பிரம்மஸ்ரீ த.சோமசுந்தரக் குருக் கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.12

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் தரம் 1க்கான கால்கோள் விழா இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

அதிபர் எஸ்.ஜெயவீரசிங்கம் தலைமை யில் நடைபெறும். இந்த விழாவில் சுவாமி சித்ரூபானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

* * *

சித்தங்கேணி,ஜன.12

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பாடசாலையின் தரம்1க்கான கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடை பெறும் இந்த விழாவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் ச.கைலாச நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள் வார். (204-112)

# போக்குவரத்துப் பொலிஸார் யாழ்.நகரில் வாகனச் சோதனை நடவடிக்கையில்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.நகரில் போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களின் சான்றிதழ்களைப் பரிசோதிக் கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற பொலி ஸார் யாழ்.நகர் மற்றும் பண்ணை, முற்ற வெளி போன்ற பகுதிகளில் இந்த நடவ டிக்கையை மேற்கொண்டனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங் களை மறித்து இவ்வாண்டுக்கான வரி அனு மதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் மற் றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற வற்றைப் பரிசோதனையிடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இந்தச் சான்றிதழ்கள் இல்லாத பலர் தண் டப்பணம் செலுத்தினர். (1-224)

# கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டம் முன்னெடுப்பு

ஆனைக்கோட்டை,ஜன.12

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் பசுபிக் ஆசிய மூலவள நிறுவனத்தால் கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்க அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கப்படவிருக்கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான விவரப் பட்டியல் தயாரிக்கும்முகமாக ஆனைக்கோட்டை கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் மற்றும் மானிப்பாய் சூசை யப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங் கம், சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் ஆகியவற்றை உள்ளடக் கியதாக நடத்தப்பட்ட கருத்தரங்கில் பய னாளிகள் தெரிவு இடம்பெற்றது.

இது தொடர்பாக பசுபிக் ஆசிய மூலவள நிறுவனத்தின் பிரதி செயற்றிட்ட முகாமை யாளர் பி.ஜே.அஜித் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் மொத்தம் 500 பயனாளி களுக்கு 2009ஆம் ஆண்டுக்கான வாழ் வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன. அதில் ஒரு பிரிவாகவே மேற்படி மூன்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

இவ்வாழ்வாதாரத் திட்டத்தில் ஒரு பயனாளிக்கு 15 கோழிகள் அல்லது 18000 ரூபா பெறுமதியான ஆடு வழங்கப்பட வுள்ளன. 15 கோழிகள் வழங்கப்படும் பட்சத்தில் அவற்றுக்கென 75 கிலோகிராம் வளர் தீவனம் மற்றும் 50 கிலோகிராம் முட்டைத் தீவனமும், நீர்ப்பாத்திரங்கள் என் பன வழங்கப்படவுள்ளன.

இதேபோன்று ஆடு வழங்கப்படும் பட்சத்தில், அவற்றுக்குத் தேவையான ஆட்டுத் தீவனமும் நீர்ப்பாத்திரங்களும் வழங்கப்படும் - என்றார்.

கடந்த வருட வாழ்வாதாரத் திட்டத் தின்கீழ் எஸ்.டி.சியின் நிதி அனுசரணை யுடன் மேற்படி நிறுவனம் சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 40 பெண் தலைமைத்துவக் குடும் பங்களுக்குக் கோழிகள் வழங்கித் திட் டத்தை நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (202-20)

# நல்லூர் பிரதேச பொங்கல் விழா

நல்லூர்,ஜன.12

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொங்கல்விழா எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப் பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதி பர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயக மும் கலந்து கொள்வர்.

முன்னதாக வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு பொங்கல் வைபவம் இடம்பெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் விழா வில் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தி னர் உரைகளும், கலை நிகழ்வுகளும், கவி யரங்கமும் இடம்பெறவுள்ளன. (202-111)

# மாகாண மட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

யாழ்ப்பாணம்,ஜன.12

மாகாண மட்டத்தில் தரம் ஐந்து மாண வர்களுக்குப் புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் தயாரிக்கப்படவுள்ளது.

வட மாகாணக் கல்வியமைச்சின் செய லாளரின் பணிப்புக்கமைய ஐந்து கல்வி வல யங்களில் இருந்தும் தலா ஐவர் தெரிவுசெய் யப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் எதிர்வரும் 15, 16, 17ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்ப்பாணம் மத் திய கல்லூரியில் நடைபெறும் செயலமர் வில் கலந்துகொள்ளும்படி யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (202)

# ஆனைக்கோட்டையில் மீன்சந்தை அமைக்க பிரதேச சபை காணி கோருகின்றது

ஆனைக்கோட்டை,ஜன.12

ஆனைக்கோட்டையில் மீன் சந்தை யொன்று அமைக்கப்படவுள்ளது. இதற் குப் பொருத்தமான காணி தேவைப்படு வதாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித் தார்.

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மை யிலுள்ள கரைப்பிரான் பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள ''பிற்பகல் வேளை'' மீன் சந்தையால் சன நெருசல் ஏற்பட்டுப் போக்குவரத்துப் பாதிக்கப்படுவதாகவும் சிலசமயம் விபத்திற்கும் காரணமாகி விடு வதாகவும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. இது குறித்து உதயனில் செய்திகள் மூலம் பலதடவைகள்சுட்டிக்காட்டப்பட்டது.

இதுதொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தபோது, குறித்த மீன்சந்தையைப் பொருத்தமான பிறிதொரு இடத்தில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறோம். அதற்குத் தேவையான பொருத்தமான இடத் தைத் தேடுகின்றோம். மக்கள் இதைக் கவ னத்தில் கொண்டு இரண்டு பரப்புக் கொண்ட வசதிகளுடன் கூடிய காணியை வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்கு தற்போதைய பெறு மதிக்கு விற்கவோ அல்லது குத்த கைக்கு விடவோ முன்வரின் தம்முடன் நேரடியா கத் தொடர்புகொண்டால் மேற் கொண்டு நடவடிக்கையை முன்னெடுக்க முடியும். பொருத்தமான இடத்தில் போக்கு வரத்திற்கு இடையூறில்லாத, அனைத்து வசதிகளுடன் கூடிய ''பிற்பகல் வேளை'' மீன்சந்தையை அமைத்துக் கொடுக்கலாம் - என்றார்.

''பிற்பகல் வேளை'' மீன்சந்தைக்குப் பொருத்தமான ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையாகவோ அல்லது வலி.தென்மேற் குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத் திலோ காணி இருப்பின் தொடர்பு கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (202-20)

# இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டம் விரைவில் மீள் புனரமைப்பு

பண்டத்தரிப்பு,ஜன.12

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டம் விரைவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட வுள்ளது.

இதற்கான நடவடிக்கையை வலி.தென் மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

முதற்கட்டமாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையிடம் மதிப்பீடு பெறப்பட்டு பின்னர் மீள்புனரமைப்புச் செய் யப்படவுள்ளது. பாதுகாப்புச் சுவர் அமைப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

நவாலி கட்டுடை இடிகுண்டு நீர்த் தேக்கத் திட்டம் 100 வருடங்கள் பழமை வாய்ந்தமை குறிப்பிடத்தக்கது. (202-130)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜன.12

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ் வார் சுவாமி கோயில் சபையினர் வடம ராட்சி வலயத்தைச் சேர்ந்த 100 மாணவர் களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்க வுள்ளனர்.

இக்கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கோயிலின் புதிய வசந்த மண்டபத்தில் இ.அன்னலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பா ளர், வடமராட்சிப் பிரதேச செயலர் ஆகி யோரிடம் இந்த உபகரணங்கள் கையளிக் கப்படவுள்ளன. (202)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.மாவட்ட முறைசாராக் கல்வி, விசேட கல்வி வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனத் தலைவர்க ளுடனான கலந்துரையாடலும், நிலையங் கள் திட்டமிடுதலும் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

இந்நிகழ்வில் ஐந்து கல்வி வலயங்களி லுமுள்ள கோட்டக் கல்வி அதிகாரிகள், முறை சாராக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் கள், முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர்கள், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு வடமாகாண மேல திக மாகாணக் கல்விப்பணிப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (202)

# மக்களின் தேவைகளையும் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு அனைத்துத் தரப்பினருக்காகவும் அர்ப்பணித்தவர் அன்னை

## சிவத்தமிழ்ச்செல்வி குறித்து தொண்டுநாத சுவாமிகள் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஜன.12



மக்களின் தேவை களை, காலத்தின் சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு சிறுவர் கள், முதியோர்கள், துன்பப்படும் மக் கள் என அனைத்துத் தரப் பினரின் சுபீட் சத்துக் காகவும் தன்னை அர்ப் பணித்தவர்சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மை யார் அவர்கள்.

இவ்வாறு நினைவு கூர்ந்து கருத்து வெளி யிட்டுள்ளார் ஹவாய் சைவ ஆதீனத் துறை ஆன்மீக அன்பர்ரிஷி தொண்டுநாத சுவாமிகள்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அன்னையின் நினைவாலயத்தைத் திறந்து வைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அன்னை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 84 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவும் அவ ரது நினைவாலயத் திறப்பு விழாவும் கடந்த புதன்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மேலும் பேசும்போது கூறியவை வருமாறு:-

ஆதி காலத்தில் ஆலயங்கள் மிகப் பெரிய அறச்சாலைகளாக [illegible] முதல் தடவையாக [illegible] பாக்கிய பெருமைக்குரியவர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மை யார் அவர்களே. அந்த அன்னையின் நினை வாக நினைவாலயம் அமைத்து பெருமைக் குரிய ஒரு சமூகமாக எமது மக்கள் உயர்ந் துள்ளனர்.

நாவலருக்குப்பின் சைவத்தையும் தமிழையும் பாதுகாக்க ஒருவர் பிறந்த தில்லை என அம்மையார் அவர்களைப் பற்றி அறியாதவர்களே கூறுகின்றார்கள். நாவலர் போன்று எமது மதத்தையும் மொழி யையும் தர்மத்தையும் நிலை நாட்டப் பிறந்த தெய்வத்தாய் அவர்கள்.

யாழ்ப்பாணத்துப் பாரம்பரியத்தின் ஒருமுகப்பட்ட பண்பாடு, கலாசாரங்களை நடைமுறைப்படுத்தியவர். அவரது சேவை இந்த மண்ணில் மட்டுமல்ல உலகெங் குமே மதிக்கப்படுகின்றது. அவரது 84 ஆவது பிறந்த தின வைபவத்தில் கலந்து கொண்டு நினைவாலயத்தைத் திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் விட்டுச் சென்ற பணிகளை ஆறு.திரு முருகன் அவர்கள் துர்க்கை அம்பாள் ஆல யத்தினூடாகவும் பிறந்த நாள் அறநிதிச் சபை யூடாகவும் முன்னெடுத்து வருகின்றார். அம்மா அவர்கள் நிகழ்த்திய அறப்பணிகள் சைவத் தமிழ்ப் பணிகளை தாய்க்குலமா கிய நீங்களும் முன்னெடுத்து அவருக்குப் பெருமை சேர்க்க வேண்டும்-என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தனது தலைமையுரையில் கூறியவை வருமாறு:-

அம்மா அவர்கள் தனது பிறந்த நாள் நிகழ்வெளிக்க அது ஏனைய மக்களுக்கு [illegible] இருக்க வேண்டும் என்றே வலியுறுத்தினார். கல்வி, சுகாதாரம் போன்ற செயற்பாடுகளில் மிகவும் கூடுதல் கவ னம் செலுத்திவந்த அம்மா, மாணவர்களின் கல்விக்காக அறக்கொடை மூலம் நிதி உத வத் தீர்மானித்து ஏற்கனவே வசதி குறைந்த பல பிள்ளைகளுக்குக் கல்விக் காக உதவி செய்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஓர் இறந்தவரின் உடலை எடுத்துச் செல் வதில் ஏற்பட்ட கஷ்டமான நிலையைப் பார்த்ததும் உடனடியாகவே ஒரு வண் டிலை ஆஸ்பத்திரிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலைக்கு அம்மாவின் பிறந்த நாளன்று பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் சுகவீனமுற்று இருந்த சமயம் அனைத்து வைத்திய அதிகாரிகளும் ஏனைய உத்தி யோகத்தர்களும் அவரை எப்படியும் காப் பாற்ற வேண்டும் என்பதற்காக மிகுந்த அக்கறையுடன் இறுதிவரை போரடினார் கள். அவர் இல்லாத நிலையில் அவரது பிறந்த தினத்தில் அவர் விரும்பும் அறப்பணி களை முடிந்த வரை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் அழைப்பு விடுக்காமலேயே அன் னையின் ஒவ்வொரு பிறந்த தின நிகழ்வி லும் எமது மக்கள் கலந்து கொள்ள வேண் டும். அவரது பணிகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசி ரியர் என்.சண்முகலிங்கன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் வி. கைலா சபிள்ளை, செயலாளர் க. நீலகண்டன், வலி. வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகி யோரும் உரையாற்றினார்கள். (202-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் மற்றும் சில பாடசாலைகளின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.12

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியதை அடுத்து பாடசாலைகளின் அதிபர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரங்களை 'உதயனு'க்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றின் விவரங்கள் பாடசாலை ரீதியாக வருமாறு:-

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**கலை:** செ.குகப்பிரியா-3ஏ, கி.ரஜீவன்-3ஏ, மு.தயாபரன்-3ஏ, தே.திவ்யா-3ஏ, இ.கவிதா-3ஏ, க.ஜானி-2ஏபி, த.நிஷாந்திலதா-2ஏபி, இ.கஜிதரன்-2ஏபி, ம.நிஷாலினி-2ஏபி, த.மதுரா-2ஏபி.

இ.யுதர்சன்-2ஏபி, சொ.கௌதமி-2ஏபி, பு.கீர்த்திகா-ஏ2பி, தி.ஜாமினி-2ஏபி, செ.நிரோஜ்-2ஏபி, பா.அபிஷாரிகா-2ஏசி, ம.கனிதவதனி-2ஏசி, ம.மலர்விழி-2ஏசி, தி.லசிகா-ஏ2பி, க.விதுஷா-ஏ2பி.

கு.தரணீதன்-2ஏபி, செ.சாறங்கன்-3பி, மு.மேரிடயானா ஏ2பி, செ.பேபிகா-ஏபிசி, தெ.சஜீபன்-ஏ2பி, ம.பார்த்தீபன்-3பி, நா.சசிகரன்-3பி, சி.விதுஜன்-ஏபிசி, சி.சாளினி-ஏபிசி, பா.சுஜானி-ஏபிஎஸ்.

செ.பிரபாலினி-2ஏசி, ந.கிறேஸ் நிஷாந்தினி-ஏபிசி, சி.கபிலினி-ஏபிசி, க.சோபிகா-ஏபிசி, த.மலர்விழி-ஏ2சி, கை.மேனகா-ஏ2சி, ஈ.மதனீசன்-ஏபிசி, யே.முகுதாசகதீஸ்-ஏபிஎஸ்.

**வணிகம்:** இ.பிரியதர்ஷினி-3ஏ, மு.ஜனனி 2ஏபி, வ.மேரி டினேக்கா-ஏ2பி, க.சிவதையல்நாயகி-3பி, த.பாமிலா- ஏபிசி, ச.சத்தியவாணி-2பிசி, க.கேமபாரதி-2பிசி.

**கணிதம்:** து.கஜன்-2பிசி, சொ.குருதரன்-2பிசி, ஜெ.கௌஷிகன்-பி2சி, மு.மகிழன்-பி2சி, ஆ.பிரணவன்-2சிஎஸ், சு.லிகிதரன்-2சிஎஸ், த.நிரோஜா-2சிஎஸ், ச.மதுரா-2சிஎஸ், சி.இராமகிருஷ்ணன்-2சிஎஸ், இ.கலைவாணி-2சிஎஸ்.

வை.புவனீசன்-2சிஎஸ், சி.பரிசுதன்-சி2எஸ்.

**உயிரியல்:** த.சுகன்ஜா-2பிசி, வி.விஜயஜங்கரன்-பிசிஎஸ், நிதர்சன்-3சி, ந.சுகாஜினி-2சிஎஸ், வி.கலையரசி -2சிஎஸ், த.சர்மிலா-சி2எஸ்.

### கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

**கணிதம்:** வ.சுஜேந்திரா-2பிசி, செ.குணாளினி-சி2எஸ், பா.பாலவரதன்-3எஸ்.

**உயிரியல்:** உ.சரண்யா-3சி, யோ.ஜீவன்-சி2எஸ், ச.கஜனி-சி2எஸ்.

**வர்த்தகம்:** சு.தனுசியா-3பி, நா.பகீரதன்-2பி.சி, ம.வசந்தரூபன்-2பிசி, சா.ரஞ்சிதா-2பி.சி, ம.கனிஜா-பி2சி.

**கலை:** சு.சரண்யா-3ஏ, த.கலைவாணி-2ஏபி, ரா.சசிகலா-2ஏபி, வெ.பிரதீபா- 2ஏபி, க.குகப்பிரியா-2ஏபி, த.கேமினி- 2ஏபி, சு.பிருந்தா-2ஏபி, ஜெ.சபேசன்-ஏ2பி, இ.நிருபராஜ்-ஏ2பி, தி.மயூரன்-ஏ2பி, ந.கார்த்திகா-ஏ2பி, ஜெ.கௌசிகா-ஏ2பி.

### அம்பன் ஏ.எம்.ரி.எம் வித்தியாலயம்

லோ.சுலோசனா-3ஏ, சி.குபிதா-3ஏ, த.இராசகுமாரி-2ஏபி, ச.கபில்ராம்-2ஏசி, ர.ஜெனனி-3பி, சி.இதயமலர்-2சிஎஸ்,

ந.வினோதா- 3ஏ, இ.யேசுரூபன்- 2ஏபி, செ.வினோதினி- 2ஏசி, வீ.யசோதா- ஏ2பி, இ.பிரதீபா- 3பி, க.காஞ்சனா- 3பி, சி.கல்யாணி- பி2சி.

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**கலை:** கே.பிரசாந்தன்- 3ஏ, வி.ஜெனார்த்தனன்- 3ஏ, எஸ்.பிரேமலதா- 3ஏ, எம்.றஜந்தன்- 2ஏபி, கே.றஜந்தன்- 2ஏபி, ஜே.சஞ்சுதா-2ஏபி, ஏ.ஜர்மிலா- 2ஏசி, ரி.நிரோஜினி- 2ஏசி, ரி.கிருபா- ஏ2பி, சீ.சோபன்-ஏ2பி, ஜி.சயந்தா- ஏ2பி, ஜே.சுகன்யா-ஏ2பி, ரி.சர்மிலா- ஏபிசி.

**வர்த்தகம்:** ரி.சுதர்சன்- ஏபிசி.

**கணிதம்:** ஆர்.ஜெகபரன்- 2பிசி, எஸ்.சகிலா-3சி.

**உயிரியல்:** எம்.மகிலன்- 2பிசி, பி.அபிராமி- 2பிசி, எஸ்.ராதிகா- பி2சி, வை.கேசிகா- பிசிஎஸ்.

## மரண அறிவித்தல்

### தம்பையா மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்திய கலாநிதி, நயினாதீவு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்திய கலாநிதி) 10.01.2009 சனிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் திருமகளின் ஆருயிர்க் கணவரும் அன்னராணி, தவராணி, மகாலட்சுமி (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரோகினிதேவி (ஆசிரியர், சிம்மிய பாரதி வித்தியாலயம், சுதுமலை), நாகேஸ்வரி (ஜேர்மனி), லெட்சுமிகாந்தன் (லண்டன்), அட்சயதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற காவலர், நயினாதீவு மகாவித்தியாலயம்), பாலசிங்கம் (வர்த்தகம்), மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை (வர்த்தகர்), மோகனராஜா (ஜேர்மனி), நாகநாதன் (வர்த்தகர்), சபேசினி (லண்டன்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற சோமசேகரம் (ஆயுள்வேத வைத்திய கலாநிதி), தியாகராசா (இளைப்பாறிய அதிபர்), தாமோதரம்பிள்ளை (வர்த்தகர்), சாமியாபிள்ளை (வர்த்தகர்), கணபதிப்பிள்ளை (வர்த்தகர்), தர்மலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் ஆயுள்வேத கலாநிதிகளான கனகசபை, கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி பேரின்பநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் உடன்பிறவாச் சகோதரரும் யோகநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், மன்னார்), அருணகிரிநாதன் (வர்த்தகர்), மணிமேகலை, வைகுந்தவாசன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் மதூஷன், வைஷ்ணவி, மயூரன், கௌதமி, தாட்சாயினி, தட்சனா, யனோசன், தேவயனா, வரப்பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2009) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வீ.மகாலிங்கம்**
(மருமகன்- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்).

2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(சி/556630)


யாழ்.நகரில் முதலாவது



முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

Annai Nagaa Food City

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு...

அசத்தலான OFFERS

→ விலைக்கழிவுகள் → ஒன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் இன்னொன்றை இலவசமாகப் பெறுங்கள்

பொங்கலுக்கு முன்னர் ரூபா.1500 இற்கு மேல் பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் அதிர்ஷ்ட சீட்டிலுப்பில் பங்குபற்றி நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகலாம்

650/= பெறுமதியுடைய பொங்கல் பொருள்கள் அடங்கிய பொதி 575/ = விசேட விலைக்கழிவில்

- சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள். (கீல்ஸ் சொசேஜஸ் -Sausages)
- பால்மா வகைகள்
- பழவகைகள், பழரசங்கள்,கேக் மற்றும் கேக் உள்ளீடுகள்.
- பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்கிலேற் வகைகள்.
- அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள், சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- சீஸ், பட்டர், மாஜரின்,
- குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

Annai Nagaa Food City



இன்றே விரையுங்கள்..!

தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P. 021 222 5375


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 40 வயதுக்குப் பின் அவசியம் மருத்துவ பரிசோதனைகள்




**கேள்வி:** வயது 40. ஆண். தனியார் வர்த்தக நிலையம் ஒன்று நடத்திவருகின்றேன். இவ்வளவு காலமும் நோய் நொடியென்று படுத்ததில்லை. இப்பொழுதும் தேகாரோக்கியமாக இருக்கின்றேன். தினமும் உடற்பயிற்சி, முறையான உணவு என்று கைக்கொண்டுவருகின்றேன். புகை, மது என்று எதுவித கெட்டபழக்கமும் இல்லை. இதனால் வைத்தியர்களிடம் போவதே இல்லை. எனது நண்பர்கள் வருடம் ஒரு தடவை முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு போகின்றார்கள். அப்படியிருந்தும் அவர்களில் சிலர் நீரிழிவு, இதயநோய், அதிகளவு கொலஸ்திரோல் போன்ற நோய்கள் இருப்பதை இந்த மருத்துவ பரிசோதனைகளில் கண்டறிந்து அதன் பின்னர் அவர்களின் வாழ்க்கை முறை, வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பவற்றை இழந்து நோயாளிகளாக வாழ்கின்றார்கள். அவர்கள் என்னையும் மருத்துவப் பரிசோதனைக்குப் போகச் சொல்கின்றார்கள். எனக்கோ மருத்துவ பரிசோதனையில் ஏதாவது கோளாறுகள் கண்டறியப்பட்டால், எனது எதிர்கால வாழ்க்கை பாழாகிவிடுமோ என்று பயமாக இருக்கின்றது. அதனால் பரிசோதனையை பிற்போட்டு காலம் கடத்துகின்றேன். நான் செய்வது சரியா, பிழையா என்று குழம்பி இருக்கின்றேன். மனிதனாகப் பிறந்தால், நோய், மரணம் எல்லாம் வருவது சகஜம். அதனை முன்னால் பரிசோதனைகள் மூலம் அறிந்து இருக்கும் வாழ்க்கையை கெடுத்துகொள்வது சரியா? நமது விதியை நம்மால் தடுக்க முடியாது என்பது எனது கொள்கை. எனது எண்ணம் சரியா? உங்கள் அபிப்பிராயம் வேண்டுகின்றேன்?

**பதில்:** உங்கள் எண்ணம் விசித்திரமானது. விதிப்படிதான் நடக்கும் என்று நீங்கள் உண்மையாகவே நம்பினால் - உங்கள் உடல் நல விஷயத்தில் மட்டுமல்ல - வர்த்தக முயற்சி, வாழ்க்கை, உணவு சகலவற்றையும் - விதியின் கையில் ஒப்படைத்து விட்டு, நீங்கள் நினைத்தவாறு, விரும்பியவாறு வாழலாம். உடல் நலத்திற்கு மட்டும் விதியை பொறுப்பு கொடுத்துவிட்டு மற்றவைக்கு உங்கள் மதியை நம்பி நடப்பது பொருத்தமாகவில்லையே. அதுபோல் - 'பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூகோளமே இருண்டு போகுமா?' என்பதுபோல், 'தீக்கோழி தலையை மண்ணுள் புதைத்து வைத்துக்கொண்டு - தன்னை ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள்' என்று எண்ணுவதுபோல் - மருத்துவ பரிசோதனைக்குப் போனால் தான் - நோய் வரும் என்று நீங்கள் எண்ணுவது நடிகர் வடிவேலு சொல்லுவது போல் 'கொஞ்சம் சின்னப்பிள்ளைத்தனம் போல் இல்லையா?

நாம் பிறந்த கணம் தொட்டு, நமது உடலில் CATABOLISM என்கின்ற உடல் இயக்கச் சிதைவு ஆரம்பமாகிக் கொள்கின்றது. வளர்ச்சி ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம் உடல் அழிந்து கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் - குழந்தை, சிறுபிராயம், வளர்இளம் பருவம், வாலிபம் போன்ற கால கட்டங்களில் வளர்ச்சி அதிகளவிலும் அழிவு நிகழ்வு குறைவாகவும் நடைபெறுகிறது.

MIDLIFE எனப்படும் 40 வயதிற்கு பின்னர் அழிவு நிகழ்வு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வயோதிபம் முதுமை நிலை வருகிறது. நோய்கள் வெளிவரத்தொடங்குகின்றன. இதனை - இரத்தக்குழாய் அடைப்பு கோளாறு ISHAEMIC HEART ATTACK மூலம் கொஞ்சம் விவரமாகச் சொல்கின்றேன். நாம் பிறந்து குழந்தையாக - சிறுவனாக இருக்கும்போதே மிக மிகச் சிறிய அளவில் 'கொலஸ்திரோல்' இதய இரத்தக்குழாய்களில் படியத்தொடங்குகின்றது. வேறுவித இடையிட்ட காரணிகள் இல்லாவிடில் இந்த படிவு மெல்ல அதிகரித்து, ஒரு எண்பது ஏன் நூறு வயதில் கூட இரத்தக் குழாய் - முழுமையாக அடைபட்டு - இருதயநோயால் மரணம் சம்பவிக்கின்றது. அதாவது, இதனைத்தான் சீன தத்துவத்தில் YIN-YANG சூத்திர அடிப்படையில் - 'மனிதன் பிறந்த அன்றே அவனது மரணம் ஆரம்பமாகிவிடுகின்றது.' என்று விளக்கியிருக்கின்றார்கள். இந்த வழமையான நிகழ்வில் ஐயோ பாவம், பிள்ளை மெலிந்திருக்கின்றான் என்று மாணவ பருவத்தில் தினமும் இரண்டு மூன்று முட்டைகளை சாப்பிடவைத்தும் இளம் பருவத்தில் FAST FOOD என்கின்ற இலகு உணவுகளை உண்டும். வாலிபத்தில் புகை, மது என்பவற்றில் இன்பம் கண்டும் பின்னர் வர்த்தகமுயற்சி, குடும்பப் பிரச்சினை, தொழில் பிரச்சினை என்பவற்றால் STRESS என்கின்ற மன இறுக்கத்தை வலித்து ஏற்றுக்கொண்டும் வேகத்தை அதிகரிக்கின்றோம். படிவுகள் நிறைகின்றன. எண்பதில் ஏற்பட வேண்டிய முழு அடைப்புக்கு ஐம்பதில் முகமன் கூறி வரவேற்கின்றோம்.

எனவே, நீங்கள் யோகியாக மிகமிக கட்டுப்பாடான வாழ்க்கையை கடைப்பிடித்தாலொழிய - பிணி, மூப்பு என்பவற்றிலிருந்து தப்புவது அரிது. ஆனால், இந்த MIDLIFE இல் நமது உடல் நிலையை அறிந்து ஏதாவது கோளாறு இருப்பின் அதற்குரிய வழிவகைகளை கைக்கொள்வது புத்திசாலித்தனம். நீங்கள் மருத்துவ பரிசோதனை செய்யாமலிருந்தால் கூட உங்கள் உடலில் உள்ள நோய்கள் என்றோ ஒரு நாள் வெளியில் வரத்தான் போகின்றன. அந்த வேளையில் அவற்றிற்குச் சிகிச்சை செய்து குணமாக்கக்கூடிய நிலையை அவை கடந்து விடும். வருமுன் காப்பது இலகு. இதனை மருத்துவத்தில் PRE-VENTIVE MEDICINE என்பார்கள். இப்பொழுது பரிசோதனையின்போது உங்களுக்கு நீரழிவு ஆரம்ப நிலையில் இருந்தால் - உணவு முறை, உடற்பயிற்சி - சிறிதளவு மருந்து என்பவற்றுடன் ஆயுளை அதிகரிப்பது மாத்திரமல்ல ஆரோக்கியமாகவும் வாழலாம். ஆனால், நீரிழிவு அதிகரித்து கட்டுமீறி - சிறுநீரகம், இதயம், கண் என்பவற்றைத் தாக்கியபின்னர் - வருந்திப் பயனில்லை. 40 வயதின் பின் சகலரும் வருடத்திற்கு ஒரு தடவையாவது மருத்துவ பரிசோதனை செய்வது அவசியம்.

***

**கேள்வி:** வயது 45. ஆண். எனக்கு கடந்த 5 ஆண்டுகளாக அதிஉயர் இரத்த அழுத்தம் (HIGH BLOOD PRES-SURE) உண்டு. அதற்கு மருந்து எடுத்து வருகின்றேன். ஆரம்பத்தில் மாதம் ஒரு தரம் 'கிளினிக்' ஒழுங்காகப் போய்வந்தேன். ஆனால், ஒவ்வொரு தரமும் 'கிளினிக்' போனதும் இரத்த அழுத்தத்தை பார்த்து - அதுகட்டுப்பாட்டில் இருக்கிறது என்று கூறி - அதே மருந்தை - அதே அளவில் ஒரு மாதத்திற்கு உபயோகிக்கச் சொல்லி அனுப்பிவிடுவார்கள். காலம் நேரம், பணம் விரயம் செய்தும் அதே மருந்தைத் தான் உபயோகிப்பதால் - மருந்து சிட்டை பக்கத்தில் உள்ள மருந்து கடையில் கொடுத்து அதே மருந்தை உபயோகிக்கின்றேன். ஆனால், கடந்த வாரம் குளித்துக்கொண்டிருக்கும்போது நினைவிழந்து குளியளறையில் விழுந்துவிட்டேன். உடனே நினைவுவந்துவிட்டது. உடனடியாக டாக்டரிடம் காட்டியபோது இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறினார். இப்பொழுது அடிக்கடி தலைவலியும் ஏற்படுகிறது. தலைவலி மாத்திரை போட்டால் குணமாகின்றது. ஆனால், இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் உள்ளது. இது எதனால் ஏற்படுகிறது. விசேடவைத்தியரிடம் ஆலோசனை பெறவேண்டுமா?

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் [illegible] எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பதில்:** உங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கின்றது. அதனால் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை மருத்துவ ஆலோசனைக்குச் செல்வது அவசியம். மருத்துவர் ஒவ்வொரு தரமும் ஒரேவிதமாகப் பரிசோதித்து ஒரே மருந்தை கொடுப்பதால் - அவர் உங்களை அலட்சியப்படுத்துவதாகவோ, தீவிர கவனம் எடுக்கவில்லையென்றோ, புதிய மருந்து தரவில்லை என்றோ நீங்கள் தப்பாகக் கணக்கு போடுவது தவறு. அதிஉயர் அழுத்தத்திற்கு நிறைய மருந்துகள் இருக்கின்றன. நோயாளியின் நோய் தீவிரம், நோயாளியின் உடல்நிலை, நோயாளியின் தொழில் என்பவற்றைக் கணக்கில் எடுத்துத்தான் மருத்துவர் பொருத்தமான மருந்துகளை எழுதுவார். அவர் எழுதிய மருந்துக்கு நோய் கட்டுப்பாட்டில் இருந்தால் ஒவ்வொரு முறையும் புதிய மருந்துகளை எழுத வேண்டிய தேவை இராது. அடுத்ததாக இப்படியான நோய்களுக்கு மருத்துவரின் கண்காணிப்பு அவசியம். உங்கள் நோய்க்கு தனியே இரத்த அழுத்த பரிசோதனை மட்டுமல்ல, கூடியது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது இருதய பரிசோதனைகளான ECG, ECHO - CARDIOGRAM, SERUM CREATININE, சிறுநீரகப் பரிசோதனைகளான BLOOD UREA, SERUM ELECTROLYTES என்பவை கட்டாயம் செய்யப்பட வேண்டும். உயர் இரத்த அழுத்தம் கட்டுப் பாட்டில் இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் கோபதாப உணர்வுகள், கவலை, மன இறுக்கம் என்பவை அவ்வப்போது இரத்த அழுத் தத்தை அதிகரித்து, இதயம், சிறுநீரகம் என்ப்வற்றைத் தாக்கலாம். இதுதவிர இரத்த கொழுப்பு அளவும் - (SERUM LIPID PROFILE) அதிஉயர் அழுத்த நோயாளிகளுக்கு அவசியமான பரிசோதனை. இதற்காக கால நேர, பணவிரயமானாலும் கூடியது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது வைத்திய ஆலோசனை அவசியமாகிறது.

சமீபத்தில் குளியலறையில் நினைவிழந்த சம்பவம் தலைவலி என்பன உங்கள் விஷயத்தில் கவனத்தில் கொள்ளவேண்டியவை. TRANSITIONAL ISHAEMIC ATTACKS என்கின்ற கணப்பொழுது மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத் தடை - அதிஉயர் அழுத்த நோயாளிகளுக்கு ஒரு அபாய அறிவிப்பு. இதனைக் கவனியாது விட்டால் பின்னர் - பாரிசவாதம் - STROKE ஏற்படலாம். அதுபோல் அடிக்கடி தாங்கொண்ணாத தலைவலி - அதிஉயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு - மூளை இரத்த குழாய் களில் இரத்தக் கசிவு ஏற்படும்போது வரும் குணம் குறிகளில் ஒன்று. இந்தக் கசிவு அதிகரித்தால் பாரிசவாதம், உயிர்ஸ்தானங்களின் - VITAL CENTERS - (சுவாசம், இருதய துடிப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதிகள்) செயலிழப்பு ஏற்பட்டு மரணம் கூடச் சம்பவிக்கலாம்.

உடனடியாக உங்களுக்கு MRI, CT SCAN போன்ற பரிசோதனைகள் தேவைப் படுகின்றன. காலம் தாழ்த்தாது. உங்கள் விசேட வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

இவ்வளவு காலமும் உங்களைக் கவனித்த விசேடவைத்தியர் உங்கள் நோய் விஷயத்தில் - கவனக் குறைவாக, அலட்சியமாக நடப்பதாக நீங்கள் கருதினால், இன்னொரு நல்ல வைத்தியரை ஆலோசனை பண்ண உங்களுக்கு சுதந்திரம் உள்ளது. உங்கள் உடலுக்கு நீங்கள் தான் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சக்தியைக் கட்டியெழுப்பிட விவேகானந்தரின் பாதையில் செயற்படுவோம்



கடந்த நூறு ஆண்டுகளில் இளைஞர்களுடைய மனத்தில் எழும் எழுச்சிகளை இதுவரை காலமும் உள்ள தலைவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. சுவாமி விவேகானந்தர் இளைஞர்களை வழிநடத்த வந்த மாபெரும் துறவிவேந்தர் என்று பகர்வதில் ஒரு தவறும் இல்லை. சுவாமி விவேகானந்தரின் வசீகரமான தோற்றம், அளவிட முடியாத ஆன்மீக பலம், அவரது கண்களில் இருந்து வந்த காந்தசக்தி உலகிடை வாழும் இளைஞர்களை அன்றும் இன்றும் கவர்ந்து வருகின்றன. அவரை மானிட உருவத்திலுள்ள கடவுளின் தூதர் எனக் கருதுவதில் தவறு இல்லை. சுவாமி விவேகானந்தர் எப்படி இளைஞர்களைத் தன்பால் கவர்ந்தார் என்பதை இவரது போதனைகளையும் கடிதங்களை யும் படித்தால் புரியும்.

இளைய பருவத்தினர் கபடமற்றவர்கள், மேலும் அனுபவமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் உடல் வலிமை, புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும் மிக்க ஆர்வத்துடன் செயல்படும் சக்தி உள்ளவர்களா கவும் காணப்படுவர். இப்பருவத்தில் உணர்ச்சி வசப்படுவதால் இவர்களது செயல்பாடுகள் வெற்றியை அளிக்காது. இங்கு தான் இன்றைய சினிமா இளைஞர்களை தவறான பாதையில் இட்டுச் சென்று விட்டது. அதேபோல் சுயநலம்மிக்க அரசியல் தலைவர்களையும், பிரபலமான விளையாட்டு வீரர்களையும் இவர்கள் தமது தலைவர்களாகவே கருதி சிலர் தமது அறையில் இவர்களது வசீகரமான படங்களை மாட்டி இதனை தமது இலட்சியமாக கொள்கின்றனர். இச்செயல்பாடுகள்தான் உலகெங்கும் நடைபெறும் பயங்கரமான கொலைகள், திடுக்கிட வைக்கும் நிகழ்வுகளுக்கு காரணியாக அமைகின்றன. இளைஞர்களுடைய சக்தியை சரியாக வழிநடத்தினால் இதனால் விளையும் பயன்பாடு சொல்லில் அடங்கா.

சுவாமி விவேகானந்தர் தமது இளமைக் காலத்தில் எதனையும் தீர ஆராயாமல் ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரை தமது குருவாக ஏற்றுக்கொள்ள முன்பு பல தடவைகள் இவரை எதிர்த்தும் வாதாடியும் வந்துதான் இவரிடம் சரண் புகுந்தார். சுவாமி விவேகானந்தர் முதலில் உன்னிடத்தில் நம்பிக்கை வை, நீ எத்தனை ஆயிரம் ஆயிரம் தெய்வங்களையும் வழிபட்டாலும், முதலில் உன்னிடத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையானால் இவ்வழிபாடுகளாலும் எவ்வித பயனும் நீ அடையமாட்டாய் என்றார். முந்திய சமயங்கள் கடவுள் நம்பிக்கை அற்றவனை நாஸ்திகன் என்று பகர்ந்தது. நவீன சமயம் இதற்கு எதிர்மாறாக உன்னிடத்தில் உனக்கு அபார நம்பிக்கை இல்லை எனில் நீதான் நாஸ்திகன் என்றனர். பலமே வாழ்வு பலமின்மையே மரணம் என்பது அவரது வேதவாக்கு. நீ உன்னை பலவீனன் என்று கருதினால் அதுதான் தெய்வநிந்தனை. உறுதியான செயல்பாடுதான் வாழ்வு. எதிர்மறையான கருத்துக்கள் முன்னேற்றத்தை தரா 'நீ எவ்வாறு கருதுகிறாயோ அவ்வாறு ஆவாய்' என்பார்.

## இன்று இளைஞர் தேசிய நாள்

39ஆண்டுகள் இவர் வாழ்ந்த முறையால் ஏழை இந்திய மக்களின் துயர் துடைக்க பாடுபட்டார். உலகெங்கும் சென்று தமது உன்னத, கருத்துக்களை பரப்பிய வண்ணம் இருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணமிஷனை தோற்றுவித்தார். இந்த அயராத உழைப்பினால் 40ஆவது வயதை எட்டமுன்பு நம்மைவிட்டு பிரிந்தார்.

இன்று மக்கள் வீரம் அற்றவர்களாகவும், சோம்பல் மிக்கவர்களாகவும், உயர்ந்த சிந்தனை அற்றவர்களாகவும் நமது நாட்டில் இருப்பதால் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் அனர்த்தங்கள் தீவிரத்தன்மையடைகின்றன. மேலும் சுவாமி யாழ்ப்பாணச் சொற்பொழிவிலும் சரி, இந்தியாவிலும் சரி, மேலைநாட்டிலும் சரி, ஆன்மீக வாழ்வின் முக்கியத்துவத்தையும் தெளிவாக பல இடங்களில் இயம்பியுள்ளார். ஆன்மீகம் தான் மக்களையோ நாட்டையோ கட்டி எழுப்பக் கூடிய சக்தி வாய்ந்த கருப்பொருள். உலகியல் வாழ்வில் பெரும்பற்று, விஞ்ஞான வளர்ச்சி, சுயநலம், பேராசை இவை யாவும் தான் உலகெங்கும் உள்ள அமைதியின்மைக்கு மூலகாரணம் என்பதை பல இடங்களில் சுவாமிகள் உறுதிபட இயம்பியுள்ளார். ஆகவே இறைவன் படைத்த அழகான உலகம் நமக்குத் தந்த சிறப்பான உடல் இருக்கையில், நாம் சுவாமி விவேகானந்தர் நமக்கு ஈர்ந்த அழி யாத பொக்கிஷத்தை ஆர்வத்துடன் ஏன் பின்பற்றக் கூடாது? இதுதான் இன்றைய தலைமுறையினரை எவரும் கேட்க உள்ள வினா. சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினமாகிய இன்று (12.01.2009)இல் இவரது திருப்பாதங்களை வணங்கி இளைஞர்கள் செயற்பட முன்வரவேண்டும். *

**சுவாமி சித்ருபானந்தா**

# பாடசாலைகளில் கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசப் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராகப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ம.இக்னேசியஸ் கலந்துகொள்வார். (202)

* * *

நவாலி, ஜன.12

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-100)

* * *

கரவெட்டி, ஜன.12

வதிரி திரு.இருதயக் கல்லூரியின் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.அம்பலவாணர் கலந்து கொள்வுள்ளார்.

(202-70)

* * *

வடமராட்சி, ஜன.12

வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, வல்வெட்டித்துறை அமெரிக்கமிஷன் பாடசாலை ஆகியவற்றில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு றோ.க.த.க பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக இருந்து இளைப்பாறிய அதிபர் ஆ.முத்தையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (202-236)

* * *

வடமராட்சி, ஜன.12

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வடமராட்சி கல்விவலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (202-236)

* * *

யாழ்ப்பாணம், ஜன.12

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை அதிபர் ச.கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி லியோன் - புஸ்பராணியும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் எ.மனோரஞ்சிதனும், கௌரவ விருந்தினராக பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் க.வே.இராசதுரையும் கலந்து கொள்வர். (202-131)

* * *

யாழ்ப்பாணம், ஜன.12

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் கு.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ந.பகீரதன் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.12

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி சா.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம் கலந்துகொள்வார். (202)

# நல்லூர் பிரிவில் மாதர் சங்கம் அமைக்க ஏற்பாடு

நல்லூர், ஜன.12

நல்லூர் ஜே/108 கிராம அலுவலர் பிரிவில் மாதர் அபிவிருத்திச் சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பகுதியில் உள்ள பெண்களின் கல்வி, பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் மகளிரும் கலந்து கொள்ளக் கூடியதான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொருட்டு மாதர் அபிவிருத்திச் சங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(202-111)

# கிழக்கிலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வற்புறுத்துகிறது ஐ.நா.

ஜெனிவா,ஜன.11

கிழக்கில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

அந்த அமைப்பின் பேச்சாளர் றொன் றெட்மண்ட் இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிழக்கில் கொலைகள், கடத்தல்கள், காயப்படுதல் போன்றவை அதிகரித்து வருகின்றன. கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 கொலைகள் பதிவாகியுள்ளன.

மீளத்திரும்பும் செயற்பாட்டுக்கு இந்தச் சம்பவங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டுவரும் என்ற கவலை கொண்டுள்ளோம்.

அங்கு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் 2 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்கள் மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். அவர்களே இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

50க்கு மேற்பட்ட குடும்பங்கள் அச்சம் காரணமாகத் தமது கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளனர். வேறும் சிலர் இரவில் வீடுகளில் உறங்குவதில்லை. வேறு சில குடும்பங்கள் ஒன்றாக ஒரு வீட்டில் தங்குகிறார்கள்.

இலங்கை அரசு இது தொடர்பாக விசாரணை செய்து போதிய பாதுகாப்பை சலக பொதுமக்களுக்கும் வழங்க வேண்டும்.

தமிழகத்தில் முகாம்களில் அகதிகளாக இருந்தவர்கள் திருகோணமலைக்கு அவர்களது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளனர். அவர்கள் குறித்தும் நாம் கரிசனையாய் இருக்கிறோம்.

கடந்த வருடம் 1,500 பேர் தாங்களாகவே இலங்கை திரும்பி விட்டனர் - என்று அவர் தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள 250,000 மக்கள் குறித்தும் நாங்கள் கரிசனையாக இருக்கிறோம் என்று அவர் மேலும் கூறினார். (1)

## இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளைக்கு புதிய முகாமையாளர்

வடமராட்சி, ஜன.12

இலங்கை வங்கியின் யாழ்.அதிமேற்றரக் கிளை முகாமையாளராக கே.பி. ஆனந்தநடேசன் இன்று திங்கட்கிழமை முதல் பதவி ஏற்கவுள்ளார்.

யாழ்.அதி மேற்றரக்கிளை முகாமையாளராகப் பணியாற்றிய கே.உலகநாதன் இளைப்பாறிச் செல்வதையடுத்து பருத்தித்துறைக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய ஆனந்தநடேசன் பதவி உயர்வுடன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (202-236)



அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் தெற்கு, கலைவாணி சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவின் ஒரு காட்சி. (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்கக் கூடாது

## முன்னாள் ஜனாதிபதி முஷாரப் சொல்கிறார்

இஸ்லாமாபாத், ஜன. 12

மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக பாகிஸ்தான் மீது போர் தொடுக்க இந்தியா முயலக்கூடாது என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வீஸ் முஷாரப் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இந்தியா அதிரடியாக போர் தொடுக்குமானால், பதிலடி கொடுக்க பாகிஸ்தான் தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

முஷாரப் தாம் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக அமெரிக்கா செல்வதற்கு முன்னர் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசினார்.

''மும்பைத் தாக்குதல் சம்பவத்தால் இந்திய - பாகிஸ்தான் இடையே போர் பீதி ஏற்பட்டுள்ளது. அச்சுறுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிடுவதால் பதற்றம் தான் அதிகரிக்கும். அரசியல் ஆதாயத்துக்காக இந்தியா இது போன்ற செயல்களில் ஈடுபடுவது முறையல்ல'' என்றும் அவர் கூறினார்.

''மும்பைத் தாக்குதல் சம்பவத்தால் பாகிஸ்தான் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சர்தாரி தலைமையிலான அரசு எப்படி கையாள்கிறது? என கேட்கிறீர்கள். இதற்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை. பிரச்சினையை எப்படி எதிர்கொள்வது என்று அதற்குத் தெரியும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''எனது ஆட்சியில் பழங்குடியினர் பகுதியில் எல்லைதாண்டிய பயங்கரவாதச் செயல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது குறித்து அமெரிக்காவுடன் நான் இரகசிய உடன்பாடு ஏதும் செய்துகொள்ளவில்லை. பழங்குடியினர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம்தான் நடவடிக்கை எடுத்தது. வேறு எவருடைய செயலுக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை'' என்றும் முஷாரப் தெரிவித்துக் கொண்டார்.

''தீவிரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தான் இன்னும் செயற்படவேண்டும் எனக் கூறுகின்றனர். இதை நான் ஏற்பதற்கில்லை. தீவிரவாதத்தை ஒடுக்க பாகிஸ்தான் கடும் நடவடிக்கை எடுத்துள்ளது. எனது ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் 1500 இக்கும் மேலான இராணுவ வீரர்களை நாம் இழந்துள்ளோம். இதில் பொதுமக்களும் ஏராளமானோர் பலியாகினர். அதே வேளை, அல்-குவைதா தலைவர்கள் சிலர் உட்பட 700 பேரை கைது செய்துள்ளோம்'' என்றும் அவர் கூறினார்.

''எங்களது செயல்களை ஊக்கப்படுத்தாமல் நடவடிக்கை போதாது என்று குற்றம்சாட்டுவது எந்த வகையில் நியாயமானது? பயங்கரவாதச் செயல்கள் அதிகரிப்பதற்கான மூல காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். காஷ்மீர் மற்றும் பலஸ்தீனப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் நேரம் வந்து விட்டது. காஸா முனையில் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் நிலைமை மேலும் மோசமடையும். அத்துடன் இது தீவிரவாதம் அதிகரிக்கவே வழிவகுக்கு ். தாக்குதல் நீடித்தால் நிலைமை சிக்கலாகும் என்பதை உலக நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் முஷாரப்.

# பாகிஸ்தானில் அடுத்தடுத்து ஐந்து குண்டு வெடிப்புகள்

லாகூர், ஜன. 12

பாகிஸ்தானிலுள்ள லாகூரில் அடுத்தடுத்து சிறிய அளவிலான 5 குண்டுகள் வெடித்தன. இவற்றில் 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணி முதல் 8.45 மணிக்குள் லாகூரிலுள்ள திரையரங்கம் ஒன்றின் அருகில் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்தன என பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

முஹர்ரம் மாதத்தை முன்னிட்டு அந்த திரையரங்கம் மூடப்பட்டிருந்தது. எனினும், ஞாயிற்றுக்கிழமை அங்கு நடைபெறவிருந்த நாடகம் ஒன்றுக்கு டிக்கெட் வாங்க வந்தவர்கள் இந்தத் தாக்குதல்களில் காயம் அடைந்தனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதனிடையே இரவு 10.30 மணியளவில் மற்றொரு திரையரங்கம் அருகே ஒரு குண்டு வெடித்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# தீவிரவாதிகளை கைது செய்ய பாகிஸ்தானுக்கு இந்தியா கால அவகாசம் அளிக்கவேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் கருத்து

புதுடில்லி, ஜன. 12

''மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானிடம் இந்தியா கொடுத்துள்ள ஆதாரங்கள் அனைத்தும் உறுதியானவை. அது தொடர்பாக தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க கால அவகாசம் அளிக்கப்படவேண்டும்'' என இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் மெல்போர்ட் தனியார் ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு தாம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''மும்பைத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் அமெரிக்கா முழு ஒத்துழைப்பு அளித்தது. அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் (எப்.பி.ஐ.) பல முக்கிய ஆதாரங்களைக் கண்டுபிடித்தனர். தற்போது பாகிஸ்தானிடம் இந்தியா அளித்துள்ள ஆதாரங்கள் மிகவும் உறுதியான, நம்பகத் தன்மைக்கு உரியவை ஆகும்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

''நான் பார்த்த வகையில் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் கண்டுபிடித்த அநேக ஆதாரங்களை உள்ளடக்கியவையாகவும், அவற்றிற்கு நிகரானவையாகவும் அவை அமைந்துள்ளன. உயர் தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டுள்ள எப்.பி.ஐ. அதிகாரிகள், நம்பகத்தன்மை இல்லாதவற்றை ஆராய்வது கிடையாது என்பதை கருத்திற்கொள்ளவேண்டும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


''ஆதாரங்களைப் பெற்று 24 மணி நேரத்துக்குள் அவற்றை பாகிஸ்தான் நிராகரித்துவிட்டது எனக் கூறப்படுகின்றது. முக்கியமான ஆதாரங்களில் உடனடிப் பதிலை எதிர்பார்க்க முடியாது. பாகிஸ்தானுக்கு மேலும் கால அவகாசம் அளிக்கவேண்டும் எனக் கருதுகிறேன். ஆதாரங்களை ஆய்வு செய்ய ஒரு ஜனநாயக அரசு, வலிமையான இராணுவம், வலிமையான உளவுத்துறை, ஊடகங்கள் மற்றும் பிற அமைப்புகள் ஆகியவை உள்ளன'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''ஆதாரங்களை நிராகரிக்கும் மனநிலையில் சிலர் இருக்கலாம். இந்த நிலைப்பாடு தேவையற்றது. பாகிஸ்தானின் சொந்த சூழ்நிலை என்ன என்பதை பார்க்கவேண்டும். சில பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் அந்த நாடு உள்ளது. அதே நேரத்தில் அமெரிக்காவும் அந்த நாட்டை தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது என்பதை மறக்கக்கூடாது. ஏனெனில், அமெரிக்காவுக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''விசாரணையில் முன்னேற்றத்தை விரும்பினால் சிலருடைய ஒத்துழைப்பு அவசியம். எனவே, இந்தியா எந்தவித தவறும் செய்யாது என்றே நம்புகிறேன். ஏனெனில், எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதே நேரத்தில், ஆதாரங்களை ஆய்வு வெய்வதற்காக பாகிஸ்தானுக்கு அளிக்கும் கால அவகாசத்தை இந்திய அரசே முடிவு செய்யலாம்'' என்றும் தூதர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

''அடுத்ததாக ஒரு தீவிரவாதத் தாக்குதல் நடந்தால், அது மிகவும் சிக்கலானதாக இருக்கும். அதனால், போர் மூளுமா என்று என்னால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், பயங்கரவாதச் சிக்கலை உருவாக்கும்'' என்றும் டேவிட் மெல்போர்ட் அச்சம் தெரிவித்துள்ளார்.

## கப்பலை விடுவிக்கக் கப்பம்!




'எம்.வி. சிரியஸ் ஸ்டார்' என்ற எண்ணெய் கப்பலை இந்திய பெருங்கடல் பகுதியில் சோமாலியா கடற்கொள்ளையர்கள் கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி கடத்திச் சென்றனர். அதில் இருந்த 25 ஊழியர்களையும், கப்பலையும் விடுவிக்க 30 இலட்சம் டொலர் கப்பம் தரவேண்டும் என்று கொள்ளையர்கள் நிபந்தனை விதித்தனர். இதையடுத்து, சவூதி அரேபியாவைச் சேர்ந்த கப்பலின் நிர்வாகிகள் அந்த பணத்தைக் கொடுத்து கப்பலையும், ஊழியர்களையும் மீட்டனர். கடந்த சனியன்று சிறிய விமானத்தில் இருந்து பராசூட் மூலம் டொலர்கள் உள்ள சூட்கேஸ் கப்பலில் இறக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது. ஹெலிக்கொப்டர் மிக நுண்ணியதாக படத்தில் தெரிகின்றது. பணயப் பணத்தைப் பெற்றுக்கொண்டு கப்பலை விட்டு இறங்கி ஒரு படகில் கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர். ஆனால் வழியிலேயே படகு கவிழ்ந்து கொள்ளையர்கள் அனைவரும் இறந்தனர் என அறிவிக்கப்பட்டது.

# போர்க் குற்றங்களை ஆராய்வதற்கு காஸாவுக்கு ஐ.நா. குழுவை அனுப்புக!

## மனித உரிமை கவுன்ஸில் தூதர் வலியுறுத்து

நியூயோர்க், ஜன. 12

''போர்க் குற்றங்களை நேரடியாக ஆய்வு செய்வதற்காக காஸா பகுதிக்கு ஐ.நா. குழு அனுப்பப்படவேண்டும்'' என சனிக் கிழமை நடைபெற்ற ஐ.நா. சபையின் விசேட கூட்டத்தில், மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தினார்.

எகிப்து, அரபு நாடுகள், கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும், இஸ்லாமிய மாநாடும் விடுத்த அவசர வேண்டுகோளுக்கிணங்க இந்த விசேட கூட்டம் கூட்டப்பட்டது. நவநீதம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், ''போர் நிறுத்தப்பட வேண்டுமென்ற ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

''சகித்துக்கொள்ள முடியாத சூழ்நிலை தற்போது காஸாப் பகுதியில் நிலவுகிறது. தாக்குதலில் காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிப்பதில் இரு தரப்புகளுமே கூடிய கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் மருத்துவ ஊழியர்கள் மீதும், மருத்துவமனைகள், அம்புலன்ஸ் வாகனங்கள் ஆகியவற்றின் மீதும் தாக்குதல்கள் நடத்துவதை இரு சாராரும் கைவிட்டு விடவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

காஸாவில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வந்த ஐ.நா. ஊழியர்களின் வாகனங்கள் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகின. இதனால், நிவாரணப் பணிகள் கைவிடப்படும் என ஐ.நா. வெள்ளிக்கிழமை அறிவித்தல் விடுத்தது.

எனினும், நிவாரணப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படமாட்டாது என இஸ்ரேல் அளித்த உறுதிமொழியை அடுத்து, நிவாரணப் பணிகள் தொடருமென ஐ.நா. அறிவித்துள்ளது.

# உலக அரங்கில்

## இந்தோனேஷியாவில் 200 பேருடன் படகு மாயம்

ஜகார்த்தா, ஜன. 12

இந்தோனேஷிய கிழக்குப் பிராந்தியத்தில் 200 பேருடன் சென்ற படகொன்று கவிழ்ந்து மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அப்படகுடனான தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுவிட்டது என அதிகாரிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தனர்.

# ஐ.நா. கோரிக்கை நிராகரிப்பு; காஸாவில் மோதல் நீடிப்பு

காஸா, ஜன. 12

போர் நிறுத்தம் செய்யுமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தையும் மீறி, இஸ்ரேல் - பலஸ்தீன தீவிரவாதிகள் இடையே சண்டை நீடித்து வருகிறது. இச்சண்டை குறித்து இஸ்ரேலிய பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட்டிடம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

போரை நிறுத்துமாறு இஸ்ரேலிய மற்றும் ஹமாஸ் தீவிரவாதிகளை வற்புறுத்தி, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வெள்ளிக்கிழமை தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இது பற்றி விவாதிக்க இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் எகுட் ஒல்மேர்ட் தலைமையில் நடைபெற்றது. இதில் போர் நிறுத்தக் கோரிக்கையை ஏற்பது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஹமாஸ் தீவிரவாதிகள் தங்கள் ரொக்கெட் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரும் வரை தாக்குதல் நீடிக்கும் என்று ஒல்மேர்ட் தெரிவித்தார்.

ஹமாஸ் தீவிரவாதிகளும் போர் நிறுத்த தீர்மானத்தை நிராகரித்தனர். காஸா மீதான இஸ்ரேலின் பொருளாதாரத் தடை விலக்கப்படவேண்டும். இஸ்ரேல் படைகள் முழுமையாக வாபஸ் பெறப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஏற்றால்தான், போர் நிறுத்தத்துக்கு சம்மதிப்போம் என்று அவர்கள் கூறிவிட்டனர்.

போர் நிறுத்த கோரிக்கையை இரு தரப்பினரும் நிராகரித்த நிலையில், 16 ஆவது நாளாக சனிக்கிழமை சண்டை நீடித்தது. ஹமாஸ் தீவிரவாதிகளின் ரொக்கெட் ஏவுதளங்கள், ஆயுதம் கடத்தும் சுரங்கப் பாதைகள் ஆகியவற்றின் மீது இஸ்ரேல் விமானங்கள் அதிகாலையில் மட்டும் 40 தடவை குண்டுகளை வீசி தாக்கின. இதில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

காஸா மீது சனிக்கிழமை 16 ஆவது நாளாக இஸ்ரேலின் தாக்குதல் நீடித்தது. இஸ்ரேல் விமானங்கள் காஸா நகரின் மீது வட்டமிட்டுப் பறந்தவாறு துண்டுப் பிரசுரங்களை வீசின. இஸ்ரேல் மூன்றாவது கட்டத் தாக்குதலை ஆரம்பிக்கவுள்ளது என பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஹமாஸ் இயக்கத்தினருக்கு ஆதரவு கொடுக்கவேண்டாம். மூன்றாம் கட்டத் தாக்குதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிடுமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள் என்றும் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக் காடுகளைக் கண்காணிக்கவே 'றோ' அதிகாரிகளுடன் சென்றது உளவு விமானம்

## அம்பலப்படுத்துகிறார் திருமாவளவன்



கிளிநொச்சி வீழ்ந்ததையடுத்து பொதுமக்களும் புலிகளும் இடம்பெயர்ந்துள்ள ஓரிரு நாள்களுக்குள், இந்திய அரசின் உளவு நிறுவனமான "றோ" அமைப்பின் நவீன விமானம், முல்லைத்தீவு காடுகளைக் கண்காணிப்பதற்கு 3ஆம் திகதி அதிகாலையில் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சில 'றோ' அதிகாரிகளுடன் இலங்கை புறப்பட்டுச் சென்றது.

- இவ்வாறு ஈழத் தமிழர் ஆதரவாளரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு-

அண்மைக் காலமாக சிங்கள இனவெறி அரசு, ஈழத்தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு இந்திய அரசு இராணுவ உதவிகளையும், பண உதவிகளையும் பெருமளவில் செய்து வருகின்றமை உறுதிப்பட்டு வருகிறது.


கிளிநொச்சியை விட்டு விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் இடம் பெயர்ந்துள்ள ஓரிரு நாள்களுக்குள், இந்திய அரசின் உளவு நிறுவனமான "றோ" அமைப்பின் நவீன விமானம் ஒன்று தமிழீழத்தின் கடலோரப் பகுதிகளையும் காடுகளையும் கண்காணிப்பு ஆய்வு செய்வதற்கு 3ஆம் திகதி அதிகாலையில் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சில 'றோ' அதிகாரிகளுடன் புறப்பட்டுச் சென்றுள்ளது.

உயர்ந்த தொழில் நுட்ப வேவு கருவிகளைக் கொண்ட இந்த விமானம் இரவு நேரத்திலும், தரையில் நடந்து செல்லும் ஒருவரை மிகத் துல்லியமாக புகைப்படம் எடுக்குமளவிற்கு ஆற்றலுடையது என்று தெரியவருகிறது.

முதல்வர் கருணாநிதியின் முயற்சியில் இந்தியப் பிரதமரைச் சந்தித்து அனைத்துக்கட்சித் தலைவர்களின் கோரிக்கையையும், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்தத்தை வலியுறுத்திய தீர்மானத்தையும் புறந்தள்ளியது மட்டுமல்லாமல், முல்லைத்தீவுப் பகுதிகளைக் கண்காணிக்க 'றோ' அமைப்பின் அதிகாரிகளை உயர் தொழில் நுட்ப உளவு விமானத்தில் அனுப்பியிருப்பது அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது.

காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது என்பதையே இது உறுதிப்படுத்துகிறது. தமிழரின் விடுதலைப் போரை நசுக்கவும், அதன் தலைவரை அழித்தொழிக்கவும் இந்திய அரசு வெளிப்படையாக ஈடுபட்டிருப்பது தமிழ்ச் சமூகத்தால் மன்னிக்கவே முடியாத செயலாகும்.

இந்திய அரசு இந்தக் காட்டிக் கொடுக்கும் கேவலத்தை உடனடியாகக் கைவிடவில்லையெனில் பொங்கியெழும் தமிழக மக்களுக்கு பதில் சொல்லியே தீர வேண்டும் - என்றுள்ளது.



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் சர்வதேச அளவிலான பட்டம் பறக்கவிடும் போட்டி நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்தியா சார்பில் பங்கேற்றுள்ள போட்டியாளர் ஒருவர் அனுமன் வடிவிலான தனது பட்டத்தைப் பறக்கவிடத் தயாராகின்றபோது......

# ஈழத் தமிழர் விடயத்தில் அடுத்த கட்டப் போராட்டம் வீரமணி, ராமதாஸ், திருமாவளவன் ஆலோசனை

சென்னை, ஜன.12

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியை டாக்டர் ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் சந்தித்துப் பேசினார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அடுத்த கட்டப் போராட்டம் குறித்து ஆலோசனை செய்கிறோம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்த விவரம் வருமாறு-

பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியை சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பேசினர். இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது.

சந்திப்பு முடிந்ததும் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில்-

"இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியுடன் விவாதித்





தோம். இந்தப் பிரச்சினையில் அடுத்த கட்ட போராட்டம் குறித்து பேசியிருக்கிறோம். இறுதி முடிவு இன்னும் எடுக்கவில்லை - என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறும்போது -

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியை சந்தித்து பேசியிருக்கிறோம். இது சம்பந்தமாக இப்போதைக்கு முதல்வர் கருணாநிதியைச் சந்திக்கும் எண்ணம் தற்போது எங்களுக்கு இல்லை - என்று கூறினார்.

# இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்திய உளவு விமானங்கள்!!

## வைகோ குமுறல்

கோவை, ஜன. 12

இலங்கை உள்நாட்டுப் போரில் இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாக இந்திய உளவு அமைப்புகள் செயற்படுகின்றன - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாக பாகிஸ்தான், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் செயற்பட்டு வருகின்றன. மூன்று கப்பல்கள் நிறைய ஆயுதங்களை பாகிஸ்தான் வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களை மத்திய அரசு அளித்து வருகிறது. இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாக பிரதமர் மன்மோகன் சிங் கட்டுப்பாட்டில் இயங்கும் உளவு அமைப்புகளும் செயற்படுகின்றன.



சுதந்திரத்துக்குப் பின் நடந்த தேர்தல்களிலேயே அதிகளவு பணம் வாக்காளர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது திருமங்கலம் இடைத் தேர்தலில்தான்.

இத் தேர்தலுக்காக மட்டும் ரூ.70 கோடி வரை தி.மு.க. செலவு செய்துள்ளது. அக் கட்சியின் முக்கிய தலைவர்களே வாக்காளர்களுக்கு நேரடியாகப் பணம் கொடுத்துள்ளனர். இதற்கான வீடியோ ஆதாரங்கள் உள்ளன.

தேர்தல் வன்முறை தொடர்பாக 52 அ.தி.மு.கவினர் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு இது வரை பிணை வழங்கப்படவில்லை - என்றார்.

# இலங்கைச் சிங்களவரை அடித்தனரென சென்னை சட்டத்தரணிகள் மீது முறைப்பாடு

சென்னை, ஜன. 12

சிங்களவரை அடித்து உதைத்தனர் எனக் கூறி சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணிகள் மீது பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இதுகுறித்த விவரம் வருமாறு-

காணாமல்போன தங்கள் மீன்பிடிப் படகை தேடுவது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் சென்னை வந்துள்ளனர். இவர்கள் எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள புத்த ஆலய வளாகத்தில் சில நாள்களாகத் தங்கியிருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இப் பகுதியிலுள்ள டாஸ்மாக் கடையொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள மதுக்கடை அருகே சென்னையைச் சேர்ந்த சில சட்டத்தரணிகள் சென்றுள்ளனர். அப்போது அருகில் சிலர் சிங்களத்தில் தங்களுக்குள் பேசியமை தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக சட்டத்தரணிகள் சிங்கள மொழியில் பேசிய நபர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் சட்டத்தரணிகளுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, சட்டத்தரணிகள் தங்களை அடித்து உதைத்தனர் எனக் கூறி சிங்களவர்கள் எழும்பூர் பொலிஸில் முறைப்பாடு அளித்தனர். இந்த முறைப்பாடு குறித்து இரு தரப்பினரிடமும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா கடும் முயற்சி எடுக்க வேண்டும்!

## கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இறுதியும் உறுதியுமான தீர்வுக்கு இந்தியா முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொச்சியில் கடந்த 8 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடப்பட்டது.

மேலும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, அரசியல் தீர்வை மறுதலிக்க முடியாது எனவும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின்னர், அதனைக் காரணம் காட்டி, பேச்சை பிற்போடுவது ஏற்றுக்கொள்ள முடியாது என இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தியா இதற்கான முனைப்புகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் இந்த தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வன்னிப் பிராந்தியத்துக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் உதவு நிறுவனங்கள் நிவாரணப் பணிகளுக்காக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இந்த தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.



சென்னை சங்கீத அக்கடமியில் ரஷிய இளம் பெண்களின் 'பாலே' நடனம் நடைபெற்றது. அவர்கள் பம்பரம் போல் சுழன்று ஆடியபோது...

# தி.மு.க. அரசுக்குத் துணை நிற்கவேண்டும் வயலார் ரவியிடம் கருணாநிதி கோரிக்கை



சென்னை, ஜன.12

தி.மு.க. அரசுக்கு, வெளிநாடு வாழ் இந்தியர்கள் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் வயலார் ரவி துணை நிற்க வேண்டும் - என்று கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 'சென்னை சங்கமம்' விழாவைத் தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு-

மத்திய அமைச்சர் வயலார் ரவி தி.மு.க. அரசுக்குத் துணை நிற்க வேண்டும். என் ஒருவனுக்காக இதைக் கேட்கவில்லை. நாட்டு மக்கள் அடிமையாகிவிடக் கூடாது என்பதற்காகக் கேட்கிறேன்.

நீங்கள் தமிழக அரசுக்குத் துணை நின்றால், நாங்கள் கேரளத்துக்குத் துணை நிற்போம். மலையாளிகள் கொண்டாடும் ஓணம் பண்டிகை நாளை, விடுமுறை நாளாக தி.மு.க. அரசு அறிவித்துள்ளது.

என் மகள் கனிமொழி இந்த தொடக்க விழாவை மிகச் சிறப்பாக நடத்தியதைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன். தேவையான பணம் கிடைத்திருந்தால் இதைவிடச் சிறப்பாக நடத்திக் காட்டியிருப்பார். தேவையான பணம் கிடைக்காததால் நான் உதவிக்கு வரவேண்டியதாகி விட்டது.

திருமங்கலம் எப்படி எனக்கு நல்ல செய்தியை சொல்லப் போகிறதோ அதைப்போல சென்னை சங்கமம் திருவிழா தெருவிழாவாக மாறி நல்ல செய்தியைச் சொல்லும் - என்றார்.

மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அம்பிகா சோனி அங்கு பேசுகையில்-

கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஒரு கலையரங்கம் வேண்டும் என்று தமிழக அரசு ஏற்கனவே கோரிக்கை [illegible] தேர்தல் வர இருக்கிறது [illegible] திட்ட அறிக்கையை அனுப்பினால் நிதி ஒதுக்க மத்திய அரசு தயாராக உள்ளது - என்றார்.

# திருமங்கலத் தேர்தல் முடிவு இன்று

சென்னை, ஜன.12

திருமங்கலம் இடைத்தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி பலத்த பாதுகாப்புடன் மதுரை மருத்துவக் கல்லூரியில் இன்று நடைபெறுகிறது. வாக்குகள் மின்னணு இயந்திரத்தின் மூலம் எண்ணப்படுவதால் இன்று நண்பகலுக்குள் முடிவு தெரிந்துவிடும்.

மதுரை திருமங்கலம் தொகுதி இடைத் தேர்தல் கடந்த 9ஆம் திகதி முடிவடைந்தது. மொத்தம் ஒரு லட்சத்து 55 ஆயிரத்து 657 வாக்காளர்களில் ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 355 பேர் வாக்களித்திருந்தனர். வாக்குப்பதிவு 88.9 சதவீதம். இது கடந்த இடைத்தேர்தலை விட 20 சதவீதம் அதிகம்.

இந்த வாக்குப்பதிவு மின்னணு இயந்திரம் மூலம் நடந்ததால் வாக்கு பதிவு முடிந்தவுடன் இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் இடமான மதுரை மருத்துவக் கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டது.

அங்குள்ள ஒரு அறையில் இயந்திரங்கள் வைக்கப்பட்டு அந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டது. அங்கு பாதுகாப்பு பணி துணை இராணுவத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அவர்கள் 24 மணி நேரமும் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து வாக்கு எண்ணிக்கை ஏற்பாடு குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

திருமங்கலம் தொகுதியில் நடந்து முடிந்துள்ள இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று மதுரை மருத்துவக் கல்லூரியில் காலை 8 மணிக்கு தொடங்கும்.

வாக்கு எண்ணிக்கை ஒளிவு மறைவில்லாமல் நடப்பதற்கு வசதியாக, ஒவ்வொரு வாக்கு எண்ணும் மேசைக்கும் கண்காணிப்பாளர், உதவியாளர் தவிர கூடுதலாக ஒரு கூடுதல் உதவியாளர் நியமிக்கப்படுவார். தேர்தல் கமிஷன் அனுப்பி வைத்திருக்கும் பார்வையாளர்கள், வாக்கு எண்ணிக்கையின் ஒவ்வொரு சுற்று முடியும் போதும், வாக்கு இயந்திரத்தின் கட்டுப்பாட்டு கருவியை திடீரென்று வாங்கி சோதனையிடுவர் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை ஓபன் டென்னிஸ் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் இந்திய வீரர் சோம்தேவ்

## ஜேர்மனியின் ஷுட்லர் அரையிறுதியில் விளையாடாமல் விலகியமையால்

சென்னை, ஜன.12

சென்னை ஓபன் டென்னிஸில் ஷுட்லர் காயத்தால் விலகியதால், இந்திய வீரர் சோம்தேவ் இறுதிப்போட்டிக்குள் நுழைந்து புதிய சாதனை படைத்தார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. மைதானத்தில் நடந்துவரும் சென்னை ஓபன் சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டது.

எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் இந்தப் போட்டியில் அரைஇறுதிக்கு முன்னேறிய இந்திய புதிய நட்சத்திரம் 23 வயதான சோம்தேவ் தேவ்வர்மன், அரை இறுதியில் நேற்றுமுன்தினம் ஜேர்மனியின் ரெய்னர் ஷுட்லரை எதிர்த்து மோத இருந்தார்.

இந்த நிலையில், மணிக்கட்டு காயம் காரணமாக கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து தாம் விலகுகிறார் என உலகின் 33ஆம் நிலை வீரரான ஷுட்லர் அறிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

இரட்டையர் பிரிவில் விளையாடிய போது எனது இடது மணிக்கட்டில் வலியிருப்பதாக உணர்ந்தேன். அரையிறுதிக்கு தயாராகுவதற்காக பயிற்சியில் ஈடுபட்டபோது, வலி இன்னும் அதிகமானது. என்னால் 'டபுள் ஹேண்ட்' மற்றும் 'பேக்ஹேண்ட்' முறைகளில் பந்தை அடிக்க இயலவில்லை. 'ஸ்லைஸ்' முறையில் மட்டுமே பந்தை அடிக்க முடிந்தது. எனவே தொடர்ந்து விளையாடினால் காயத் தன்மை அதிகரிக்கும் என்று பயப்படுகிறேன். எனவே இந்தப் போட்டியில் இருந்து விலகுவது என்று முடிவு எடுத்திருக்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பும் இதே போல் பிரச்சினை எனக்கு ஏற்பட்டது. ஆனால் அப்போது இருந்ததை விட இப்போது, வலி அதிகமாகவுள்ளது. சிட்னி ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து விலகியுள்ளேன். அடுத்து நான் மெல்போர்ன் செல்கிறேன். அங்கு, அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி தொடங்குவதற்குள் உடற்தகுதி பெற முயற்சிபேன்.

சென்னை ஓபன் போட்டியில் இருந்து விலகியமை, மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. ரசிகர்களுக்கும், போட்டி ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். - இவ்வாறு ஷுட்லர் தெரிவித்தார்.

ஷுட்லர் அரைஇறுதியில் விலகியதால், அவரை எதிர்த்து ஆட இருந்த சோம்தேவ் தேவ்வர்மன் விளையாடாமலேயே இறுதிப்போட்டிக்குள் முன்னேறி புதிய சாதனை படைத்தார். 14 ஆண்டு கால சென்னை ஓபன் டென்னிஸ் வரலாற்றில் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் ஒருவர் இறுதிப்போட்டிக்குள் நுழைவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பாக, 1998ஆம் ஆண்டு லியாண்டர் பெயஸ் அரைஇறுதி வரை முன்னேறியதே, இந்திய வீரர் ஒருவரின் சிறந்த நிலையாக இருந்தது.

வைல்டு கார்டு மூலம் இந்த போட்டியில் முதல் முறையாக பங்கேற்ற சோம்தேவ், 2ஆவது சுற்றில் முன்னாள் முதல்தர வீரர் கார்லஸ் மோயாவாவையும் (ஸ்பெயின்), கால்இறுதியில் 25ஆம் நிலை வீரர் குரோஷியாவின் கார்லோவிச்சையும் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியில் முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ள இந்திய வீரர் சோம்தேவ் கூறுகையில், ''இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்றாலும், ஷுட்லருடன் விளையாட முடியாமல்போனது ஏமாற்றம் அளிக்கிறது. ரசிகர்களும் ஏமாந்துள்ளனர். அவருக்கு எதிராக ஆடுவது கடினமாக இருக்கும் என்பது எனக்கு தெரியும். அவர் அனுபவம் வாய்ந்த வீரர். எனவே அவருக்கு எதிராக தாக்குதல் ஆட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது.

''முந்தைய வெற்றிகளை மறந்து விட்டு, முழுக் கவனத்தையும் இறுதிப் போட்டியில் செலுத்தி வருகிறேன். சிலிச், இந்தத் தொடரில் நன்றாக செயல்பட்டு வருகிறார். எனவே இறுதிப்போட்டி கடினமாக இருக்கும்'' - என்றார்.




# நியூஸிலாந்து – மேற்கிந்தியத் தீவுகள் 4ஆவது ஆட்டம் மழையால் குழம்பியது

ஒக்லண்ட், ஜன.12

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி மழையால் பாதிக்கப்பட்டது. இதனால் நியூஸிலாந்து புதுமுக வீரர் மார்ட்டின் குப்தியின் சதம் வீணானது.

கெய்ல் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையேயான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் 4ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒக்லண்டில் நேற்றுமுன்தினம் நடந்தது.

முதலில் ஆடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்கள் குவித்தது. புதுமுக வீரர் மார்ட்டின் குப்தில் தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்கி தனது முதல் போட்டியிலேயே சதம் அடித்து அசத்தினார். அவர் 135 பந்துகளில் 8 பவுண்டரி, 2 சிக்ஸருடன் 122 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார். அவர் முறையே 16, 21, 33 ஆகிய ஓட்டங்களில் இருந்த போது ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து தப்பியமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வரலாற்றில் அறிமுகப் போட்டியிலேயே சதம் அடித்த வீரர்களின் பட்டியலில் 5ஆவது வீரராக குப்தில் இணைந்தார். முன்னதாக இங்கிலாந்தின் அமிஸ், மேற்கிந்தியத் தீவுகளின் தேஷ்மண்ட் ஹெய்ன்ஸ், ஸிம்பாப்வேயின் ஆன்டிபிளவர், பாகிஸ்தானின் சலீம் இலாகி ஆகியோர் தங்களது முதல் போட்டியிலேயே சதம் அடித்து இருக்கிறார்கள்.

மேலும் முதல் போட்டியிலேயே அதிக ஓட்டங்கள் விளாசிய 2ஆவது வீரர் என்ற பெருமையும் குப்திலுக்கு கிடைத்தது. 1978ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் தேஷ்மண்ட் ஹெய்ன்ஸ் 148 ஓட்டங்கள் குவித்தமையே அறிமுக வீரர் ஒருவர் குவித்த அதிகபட்ச ஓட்டங்களாகும்.

பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 8.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 47 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் 40 ஓவர்களில் 235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் மீண்டும் மழை குறுக்கிட்டது. அப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 10.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 64 ஓட்டங்களை எடுத்திருந்தது. கெய்ல் 46 ஓட்டங்களுடனும், ஷாட்டர்கோன் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மழை தொடர்ந்து கொட்டியதால் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டித் தொடரில் முதல் ஆட்டமும் மழையால் ரத்தானது. 2ஆவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும், 3ஆவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியும் வெற்றி கண்டன. இதனால் தொடர் 1:1 என்ற கணக்கில் சம நிலையில் உள்ளது. 5ஆவது மற்றும் கடைசி ஆட்டம் நேப்பியரில் நாளை நடக்கிறது.

# ஆஸி. ஓபன் பயிற்சி ஆட்டத்தில் அதிர்ச்சி கொடுத்த சானியா!

ஹொங்கொங், ஜன.12

ஹொங்கொங்கில் நடைபெற்ற உலகக் குழு டென்னிஸ் போட்டியில், முன்னிலை வீராங்கனை அக்னேஸ் ஸ்வாவேக்கு சானியா மிர்சா அதிர்ச்சி அளித்தார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிக்கு பயிற்சி ஆட்டமாக முதல் முறையாக இதுபோன்றதொரு போட்டியை சர்வதேச டென்னிஸ் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா 6:3, 6:4 என்ற கணக்கில் ஹங்கேரியின் அக்னேஸ் ஸ்வாவேயை வீழ்த்தினார்.

உலகத் தரவரிசையில் சானியா மிர்சா 100ஆவது இடத்திலும், அக்னேஸ் 25 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இப்போட்டியில் வெள்ளிக் குழு சாம்பியனுக்காக ஆசிய - பசிபிக் அணியும், ஐரோப்பிய அணியும் மோதின. இதில் ஆசிய - பசிபிக் அணி சார்பில் சானியா பங்கேற்றார். இரட்டையர் ஆட்டத்தில், சானியா மிர்சா, சீனாவின் ஜெங் ஜி இணை 6:1, 6:1 என ஐரோப்பிய இணையான செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிக், போர்ச்சுகலின் மிச்செல் லார்செர் டி பிரிட்டோ இணையை சாய்த்தது. ஒற்றையர் பிரிவில் உலகத் தரவரிசையில் ஜெலினா ஜான்கோவிக் முதலிடத்தில் உள்ளார்.

ஒற்றையர் பிரிவின் மற்றோர் ஆட்டத்தில், காயம் காரணமாக ஜெலினா ஜான்கோவிக் பங்கேற்கவில்லை. இதையடுத்து ஆசிய- பசிபிக் அணி 3:0 என ஐரோப்பாவை வென்றது.

## மூன்று நாடுகள் - ஒருநாள் தொடர்:

# சொந்த மண்ணில் பங்களாதேஷ் ஸிம்பாப்வேயிடம் மண்டியிட்டது

டாக்கா, ஜன.12

பங்களாதேஷில் ஆரம்பமாகியுள்ள 3 நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் ஸிம்பாப்வே, பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இலங்கை, பங்களாதேஷ், ஸிம்பாப்வே ஆகிய அணிகள் இடையிலான முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டித்தொடர் பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

மிர்புரில் நேற்றுமுன்தினமம் நடந்த முதலாவது ஆட்டத்தில் ஸிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகள் சந்தித்தன. நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் ஸிம்பாப்வேயை துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டது. இதன்படி ஆடிய ஸிம்பாப்வே அணிக்கு 123 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுகள் சரிந்தன. இதன் பின்னர் சிகும்புராவின் ஸ்திரமான ஆட்டத்தால் ஸிம்பாப்வே அணி 200 ஓட்டங்களைக் கடந்தது. 50 ஓவர்கள் முடிவில் ஸிம்பாப்வே அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் எடுத்தது. சிகும்புரா 64 ஓட்டங்கள் (95 பந்துகளில் 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) சேர்த்தார்.

பங்களாதேஷ் தரப்பில் ஷகிப் அல் ஹசன், நயீம் இஸ்லாம் தலா 3 விக்கெட்டுகளும், மோர்தாசா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள்.

தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணி, சொந்த மண்ணில் தடுமாறியது. பந்து வீச்சில் கலக்கிய சகதுறை நாயகன் ஷகிப் அல் ஹசன் மட்டுமே தாக்குப்பிடித்து விளையாடினார். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் அட்டமிழந்தனர். 46.2 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸிம்பாப்வே அணி வெற்றி பெற்றது. ஷகிப் அல் ஹசன் 52 ஓட்டங்களும் (66 பந்து), ரகிபுல் ஹசன் 23 ஓட்டங்களும், அணித் தலைவர் முகமது அஷ்ரபுல் 17 ஓட்டங்களும் எடுத்தனர். 3பேர் 'ரன்-அவுட்' ஆனது, பங்களாதேஷுக்கு பின்னடைவாக அமைந்தது.

ஸிம்பாப்வே அணி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிக்கு எதிராக 2007ஆம் ஆண்டுக்குப்பிறகு பெற்ற முதல் வெற்றி இதுவாகும். ஸிம்பாப்வே வீரர் சிகும்புரா ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

நாளை நடக்கும் அடுத்த போட்டியில் இலங்கை - ஸிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

# இங்கிலாந்து அணித் தலைவராக ஒருநாள் தொடருக்கும் ஸ்டிராஸ்

லண்டன், ஜன. 12

இங்கிலாந்து டெஸ்ட் அணித்தலைவர் அண்ட்ரூ ஸ்டிராஸுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் தொடருக்கான ஒரு நாள் மற்றும் ருவன்ரி - 20 போட்டிகளுக்கும் இவர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பயிற்சியாளருடன் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன் அணித்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார். உடனடியாக இங்கிலாந்து அணியின் டெஸ்ட் அணித்தலைவராக அண்ட்ரூ ஸ்டிராஸ் நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்து அணி வரும் 25ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகள் சென்று, அங்கு 4 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் ஒரு ருவன்ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

டெஸ்ட் அணித்தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஒரு நாள் மற்றும் ருவன்ரி-20 போட்டிகளுக்கு அணித்தலைவரைத் தெரிவு செய்ய, இங்கிலாந்து தெரிவுக்குழு நேற்றுமுன்தினம் கூடியது. முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் எதிரான தொடர் முழுமைக்கும் ஸ்டிராஸ் அணித்தலைவராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இது குறித்து தேர்வுக் குழு தலைவர் ஜியாப் மில்லர் கூறுகையில், ''மேற்கிந்தியத் தீவுகள் தொடர் முழுமைக்கும் ஆன்ட்ரூ ஸ்டிராஸ் அணித்தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். தொடர் முடிவடைந்த பின், அவரது செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்படும்'' - என்றார். கிரிக்கெட் சபையின் முடிவுக்கு ஸ்டிராஸ் சம்மதம் தெரிவித்துள்ளார்.

## ஆஸி. ஓபன் டென்னிஸின் பரிசுத் தொகை அதிகரிப்பு

சிட்னி, ஜன. 12

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி வருகின்ற 19ஆம் திகதி முதல் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை மெல்போர்னில் நடைபெறுகிறது. இதற்காக வீரர், வீராங்கனைகள் தயாராகி வருகிறார்கள்.

ஆண்டுதோறும் இந்தப் போட்டிக்கான பரிசுத்தொகை உயர்த்தப்படுவது வழக்கம். இதன்படி கடந்த ஒக்ரோபர் மாதம் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மீண்டும் பரிசுத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்லும் இரு பாலருக்கும் இந்தியப் பணத்தில் தலா ரூ.6 கோடியே 80 லட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்படும். கடந்த ஆண்டு ரூ.4 கோடியே 65 லட்சம் தான் கொடுக்கப்பட்டது. 2ஆவது பரிசாக ரூ.3 கோடியே 40 லட்சம் கிடைக்கும். 'ஜனவரி மாதம் நடக்கும் உலகின் மிகப்பெரிய விளையாட்டான இதில் வெற்றி பெறுவோருக்கு இவ்வளவு தொகை வழங்குவது தகுந்த பரிசாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்று போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் கூறியுள்ளனர். இந்த போட்டியின் மொத்த பரிசுத் தொகை இந்தியப் பணத்தில் ரூ.79 கோடியாகும். சென்ற வருடத்தை விட இது 12.3 சதவீதம் அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பல பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்; பெண் பலி; 52 பேர் படு காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஜன.12

வன்னியில் நடைபெறும் மோதல்களில் இருந்து தப்புவதற்காக இடம்பெயர்ந்து செல்லும் மக்கள், படையினரின் ஷெல் மற் றும் விமானத் தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தாக்குதல்களின் போது மரணங்கள் சம்பவிப்பதுடன் பலர் காயமடைவ தாகவும் புதினம் இணையத்தளம் செய்தி வெளி யிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் வெளியான ஏனைய விவரங்கள் வருமாறு:-

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வான் படையினரும் கடற்படையினரும் தரைப் படையின ரும் கூட்டாக இணைந்து தாக்குதலை நடத்தினர்.

இதில் 40 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். கல்லாறு பகுதியில் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் அப்பாவி பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர். முல்லைத்தீவு தேராவில் மேற்குப் பகுதியில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட பத்து பேர் காயமடைந்துள்ளனர்.

தேராவில் பொதுமக்கள் குடியிருப்புக்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் படையினர் இலக்கு வைத்து ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பொதுமக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பகுதி மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பத்து பேர் காயமடைந்தனர். மரியதாஸ் அந்தோனி (வயது - 85), பொன்னம்மா (வயது - 75), ரமேஸ்குமார் சஞ்சீவன் (வயது இரண்டரை), செல்வராசா தர்சிகா (வயது-15), ஆ.பிரமிலன் (வயது - 17), ம.சண்முகலிங்கம் ஆகியோரே காயமடைந்துள்ளனர். ஏனைய நான்கு பேரின் பெயர் விவரம் கிடைக்கப் பெறவில்லை.

காயமடைந்தவர்கள் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் மற்றைய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தருமபுரம் தெற்குப் பகுதியில் நேற்றுக் காலை முதல் படையினர் இடம்பெயர்ந்த மற்றும் நிலையான பொதுமக்கள் குடியி ருப்புக்களை இலக்கு வைத்து செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வட்டக்கச்சி பகுதியில் படையினரின் ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் நேற்றும் முற்பகல் படையினர் நடத்திய ஷெல் தாக்கு தலிலும் வான்குண்டுத் தாக்குதலிலும் பொது மக்கள் எட்டுப் பேர் காயமடைந்துள் ளனர் - என்றுள்ளது.

## பதிவு செய்யாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுசெய்யாதவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயலும் சக்திகளை இனம் காண்பதற்காகவே இந்தப் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களைப் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யும் நட்வடிக்கை முதற்கட்டமாக மேல்மாகாணத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றது. மக்கள் உடனடியாக இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட இணையத்தளத்தில் தம்மைப் பதிவு செய்யவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் தம்மைப் பதிவு செய்யத் தயங்குபவர்களிடம் அதிகாரிகள் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''சமீபத்தில் கொழும்பில் இவ்வாறான பதிவு நடவடிக்கையொன்றை மேற்கொண்ட வேளை வெள்ளவத்தையில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள முக்கிய தொடர்புகள் தெரியவந்தன. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயலும் சக்திகளை நாங்கள் இனம் காண முயல்கிறோம். '' - எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசிய பாதுகாப்பிற்கான மத்திய ஊடக நிலையத்தின் செயலாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல பாதுகாப்பு அமைச்சிடம் சகல மக்களும் பதிவு செய்து கொள்வது கட்டாயமானது எனத் தெரிவித்துள்ளார்.

(அந்த விவரத்தை உள்ளே 2 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.) (அ-சி)

## லஸந்த படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க கடந்த வியாழனன்று சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 61), துரைசாமி சின்னம்மா (வயது - 55), துரைசாமி தமிழினி (வயது 17) மற்றும் எஸ்.தவக்குமார் (வயது - 17) ஆகியேரே உயிரிழந்தனர்.

கலாதீபன் மஞ்சு(வயது - 26), கலாதீபன் திவ்யா (வயது - 05), மாரியம்மா (வயது - 60) மற்றும் சுப்பையா (வயது - 62) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை, கிளிநொச்சி, வட்டக்கச்சி மற்றும் புளியம்பொக்கணைப் பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல் களினால் புதுக் குடியிருப்புப் பகுதியில் பதற்றம் நிலவி வருகின்றது என்றும் அந்த இணையத் தளம் மேலும் தெரி வித்தது. அ-சி)

## ஜப்பானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் அகாஷி திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யசூஷி அகாஷியை கிழக்கு மாகாணத்திற்கு அழைத்துச் சென்று அங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களைக் காண்பிப்பதற்கு அரசு ஆர்வமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசு தடைசெய்த பின்னர் ஜப்பானிய பிரதிநிதியின் இந்த விஜயம் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மூதூரில்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர்கொல்லப்பட்டார்.மேலும் இருவர் படு காயமடைந்தனர் என்றும் -

கருணா குழுவினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகள் அணியினரைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர் என்றும் - படைத்தரப்பில் மேலும் தெரி விக்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகள் இருவரது சடலங்களையும் ரி- 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், கைக் குண்டு மூன்றையும் மற்றும் கைத்தொலைபேசி ஒன்றையும் தாங்கள் மீட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

## லஸந்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மக்களின் அஞ்சலிக்காக உடல் நேற்று வரை அங்கே வைக்கப்பட்டிருந்தது. இன்று பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் உடல் நாரேஹன்பிட்டி கிரிமண்டல மாவத் தையில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு பிற்பகல் 2 மணிவரை சமயக் கிரியைகள் இடம்பெறும்.

அங்கிருந்து பொரளை கனத்தைக்கு 4 மணியளவில் உடல் மக்கள் பேரணியுடன் எடுத்துவரப்பட்டு இறுதிக்கிரியை நிகழ்வுகள் அங்கு இடம்பெறும்.இறுதிக்கிரியை நிகழ்வுக்கான ஏற்பாடுகளை எதிர்க்கட்சிகள், பொது அமைப்புகள் போன்றவை ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ளன.

அன்னாரின் பூதவுடலுக்குப் பெருந்திரளான மக்களும், அரசியல்வாதிகளும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்றைய இறுதிக்கிரியை நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிற்பகல் 12.30 மணிக்கு லஸந்த விக்கிரமதுங்கவின் உறவினர்கள் அன்னாரின் உடலை மக்களிடம் கையளிப்பர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர எம்.பி. நேற்றுத் தெரிவித்தார். (அ-சி)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று காணப்படுவது அவசியமானது; இன்றியமையாதது. - என்று பாப்பரசர் வலியுறுத்தினார்.

### அவசரமான தேவைகள்

பசிக்கு எதிராகப் போராடுவதற்கான உகந்த உத்தி ஒன்றை உருவாக்குவதும், விவசாயத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறையையும் அவசரமாகக் கண்டாக வேண்டும்-

உலகில் சமாதானத்தை உருவாக்குதற்கு ஏழைகள் மத்தியில் நாம் புதிய நம்பிக்கையைத் தோற்றுவிக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில் தோன்றியுள்ள உணவுப் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி மற்றும் பூமி வெப்பமடைதல் ஆகிய ஆபத்தான பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு உண்டாகினால் மட்டுமே வறுமையை ஒழிக்க முடியும்-

மனித வளத்தையும் ஏனைய வளங்களையும் பல நாடுகளிலும் விழுங்கிக்கொண்டிருக்கும் இராணுவச் செலவுகளை அபிவிருத்திக்கு திசை திருப்பாவிடின் சமாதானத்தை உருவாக்க முடியாது - என்றும் பாப்பரசர் நேற்றைய மாநாட்டின் போது தமது பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினார். (அ)

## கோத்தபாயவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஜனாதிபதி கூறியிருக் கின்றார்.

ஒரு பிரபல தனியார் பத்திரிகை ஆசிரியர் ஒருவரை ஜனாதிபதி தொலைபேசி மூலம் மிரட்டி இச் செய்திக்கு முக்கியத் துவம் கொடுக்கவேண்டாம் என்று உத்தர விட்டமை எமக்குத் தெரியவந்துள்ளது.

ஆனால், மறுபுறம் லஸந்த தனது நெருங்கிய நண்பன் என்று காட்டிக் கொள்ளவும் அவர் முற்படுகிறார்.

லஸந்த அண்மைக்காலமாக அரசில் இடம்பெற்ற பாரிய மோசடிகளை மிகத் துணிச்சலுடன் அம்பலப்படுத்தியிருந்தார்.

தமிழ் எம்.பிக்களின் நிலை குறித்து லஸந்த தகவல்களைத் திரட்டியுள்ளார். அது மாத்திரமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜோஸப் பரராஜசிங்கம் மற்றும் ரவிராஜ் ஆகியோரைக் கொலை செய்தவர்கள் பற்றிய தகவல்களையும் லஸந்த திரட்டியிருந்தார்.

இதன் காரணமாகத்தான் லஸந்த கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை நன்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டுள்ளது.பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே இக் கொலைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் 'சிங்க மாபியா', 'பிசாசுப் படையணி' மற்றும் 'கே - 09' என்ற வெவ்வேறு பெயர்களில் ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த ஆயுதக்குழு நன்கு பயிற்றப்பட்டது. இந்த ஆயுதக்குழுவில் முக்கிய படை அதிகாரிகள் பலர் உள்ளனர்.

இந்தக் குழுவில் உள்ள 'நேவி சம்பத்' என்ற அதிகாரியே கொலைசெய்யப்பட வேண்டியவர்களின் விவரங்களைத் திரட் டுகிறார்.

கொலை செய்யப்பட வேண்டியவர்களின் நடமாட்டம் இவரால் நன்கு அவ தானிக்கப்படுகிறது. எனது நடமாட்டமும் கூட இவரால் நன்கு அவதானிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்தக்குழு தொடர்பாக லஸந்த முழு விவரங்களையும் திரட்டியிருந்தார். இந்த விவரங்கள் அம்பலப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே, லஸந்த இந்த விசேட பயிற்சி பெற்ற ஆயுதக்குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார் -என்றார். (அ-சி)


## தேவை

பத்திரிகை மடிப்பவர்கள் உடன் தேவை

* முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
* அனுபவத்துக்கும் தகுதிக்கும் ஏற்ப கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள்.
* யாழ். மாநகரசபைப் பகுதியில் வசிப்பது மேலதிக தகைமையாகும்.

நேரில் வரவும்:

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## YOGI'S BEAUTY

The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

1. அழகுக்கலை பயிற்சிகள் (Beauty Culture - Facial Classes)
2. ஒப்பனை, தலை அலங்காரங்கள் (Bridal Make-up and Hair Styles)
3. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing & Sugar Art on Fondant Structures)
4. கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Cake Icing and Sugar Flowers)
5. நவீன முறையில் 5 விதமான சாறி பிளவுஸ் கட்டிங்குகள் (Latest Saree Blouse Cuttings)

ஆரம்பம்: 17.01.2009 மு.ப. 10 மணி

பயிற்சிகள் முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

| Mrs.YOGINI SHANMUGANATHAN | Phone: |
|---|---|
| Dip. In High Tec Aesthetics and Cosmetology (India) | 0212222796 |
| Dip. In Advanced Bridal Make-up & Character Make -up (India) | 0602210077 |
| | 0777164923 |
| Dip. In Home Economics (India & Sri Lanaka) | 0712510025 |

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)

## வெளிவந்து விட்டது

(O/L 2008 Scheme of Marking)

புள்ளியிடல் திட்டத்தை தழுவிய விடைகள்

* தமிழ் மொழி
* விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

ஆகிய பாடங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

விலை 100/=

அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

## ENGLISH MEDIUM

GRADE SIX புதிய வகுப்புகள்

ஆரம்பம் - 12.01.2009 3 மணிக்கு யாழ்.நகரில் ஆங்கில மொழிக்கான தனி நிறுவனம். பிரபல கல்லூரி ஆசிரியர் குழாத்தின் வழி நடாத்தல் தரம் 6 முதல் A/L வரை

EVER SHINE EDUCATION CENTRE
123, BROWN ROAD, JAFFNA.

## இன்று ஆரம்பம்

A/L Day Class

(வர்த்தகப் பிரிவு)

காலை 9.00 மணி

DMI நாவலர் வீதி, யாழ்.

## Pongal Promotion...

**Pentium 4 Computer**
Intel 1.8Ghz Celeron
Biostar 965 DDR11 Mother Board
40GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
Asus CD Rom
ATX Black Casing
15" Black CRT LG Monitor
Key board
Optical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
37,000/=

**Pentium 4 Computer**
Intel 2.2Ghz Dualcore Processor
Foxconn G31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
Sony DVD Writer Sata
ATX Handle Black Casing (500W)
15" LCD Monitor
Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
47,000/=

**Pentium 4 Computer**
Intel 2.2Ghz Dual Core Procasor
Foxconn G31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
17" LCD Monitor
ATX Handle Black Casing (500W )
Asus DVD R/W Lightscrbe
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
49,000/=

**Pentium 4 Computer**
Intel 2.2Ghz Dual Core Proceesor
Asus P5GCMX/GBL Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Ghz Ram
17" LCD Monitor
ATX Handle Casing(500W)
Asus DVD R/W Lightscribe
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
49,500/=

**Pentium 4 Computer**
Intel 2.2Ghz Dual Core Procasor
Intel DG31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
16" LCD Monitor
ATX Handle Black Casing (500W )
Sony DVD Writer Sata
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
50,000/=

**Pentium 4 Computer**
Intel 2.2Ghz Dual Core Proceesor
Intel DG31 Mother Board
160GB Sata HDD
1GB DDR11 800Mhz Ram
19" LCD Mulrimedia Monitor
ATX Handle Casing(500W)
Sony DVD Writer Sata
Multimedia Keyboard
Opitical Mouse
FREE
Pendrive
Mouse Pad , Duest Cover
56,000/=

OFFER VAILD FOR 11.01.2009 -16.01.2009

Warrenty 1 - 3 Years

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, கூமாஸ்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.